LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL MAGAZINE

MYLAPORE

EDITORIAL BOARD

EDITOR-IN-CHIEF

Srimathi S. Chellam, M.A., L.T.

ASST. EDITORS

Srimathi	G. Shantha, B.A., B.T.	(English Section)
,,	C. R. Sathyabhama, B.A., B.T., H.Sc. (Dip.)	(English Section)
,,	H. R. Nagamani, B.A., B.T.	(Tamil Section)
,,	P. V. Janaki, B.A.	(Tamil Section)
,,	V. Sarojini, Drawing & Needle-Work (Dip.)	(Tamil Section)
,,	V. Sarojini ,,	(Art Section)

PUPIL-EDITORS

L. V. Jayalakshmi	Form VI-B	(English Section)
S. R. Rajalakshmi	,, V-A	(English Section)
B. Vidyambal	,, VI-A	(Tamil Section)
B. Parvathi	,, V-D	(Tamil Section)
G. Saraswathi	,, VI-A	(Art Section)

Printed by Mr. G. Raghavan at The Huxley Press, 114, Armenian Street, G.T., Madras
1185 Copies and Published by Srimathi S. Chellam, M.A., L.T., Editor
at Lady Sivaswami Ayyar Girls' High School, Mylapore.

CONTENTS

	PAGE
உழவின் உயர்வு—C. P. Kalavathi, VI-A. ...	1
மந்தரை சூழ்ச்சி—N. Vasanthalakshmi, VI-A. ...	2
மூன்று உண்மைகள்—B. Kalpakam, VI-B. ...	5
புலவரும் புரவலரும்—N. S. Kalpakam, VI-C. ...	6
பகலவன் மறைவு—S. Kousalya, VI-D. ...	8
கற்பின் சிறப்பு—R. Pattammal, VI-D. ...	9
நகைச் சுவை—R. Kalpakam, V-A. ...	10
கல்வி—R. Kokilam, V-B. ...	12
கலையும் தொழிலும்—P. V. Ambujam, V-C. ...	14
ஆசு கவி காளமேகம்—A. Pichammal, V-D. ...	15
ஏழை—S. Parvathi, IV-A. ...	17
உல்லாசப் பிரயாணம்—T. N. Komathi, IV-B. ...	18
கடற்கரைக் காட்சி—G. Seetha, IV-C. ...	19
நட்பு—S. Lakshmi, IV-D. ...	20
எனது 'கோவா' பிரயாணம்—E. K. Parvathavarthini, III-A. ...	22
தீபாவளி—R. Sasireka, III-B. ...	23
சிறந்த கானம்—M. C. Uma, III-C. ...	24
ரோஜா—C. R. Chandra, III-D. ...	25
மஹிடாசுர மர்த்தினி—G. Nirmala, II-A. ...	26
தேங்காய்—S. V. Lalitha, II-B. ...	27
கடல்—S. Jayakumari, II-C. ...	27
பானை—K. S. Hemavathi, II-D. ...	28
முடவனும் கொம்புத்தேனும்—N. V. Shyamala, I-A. ...	29
முயற்சி—T. R. Gayathri, I-B. ...	30
உடற் பயிற்சி—M. V. Rajam, I-C. ...	31
மயிலாப்பூர்—M. C. Nalini, I-D. ...	32
ஆசிரியர் சங்கம் : 1952-'53—K. Sumukhi, B.Sc., B.T., & A. Vijayalakshmi ...	32
மாணவியர் சங்கம்—R. Alamelu, VI-A. & M. N. Revathi, VI-C. ...	34
பழைய மாணவியர் தினக் கொண்டாட்டம்—G. Shantha, B.A., B.T., & N. Thayammal ...	37
அன்னையர் சங்கம் 1952-'53—V. Rajammal ...	40
சங்கீத சபை—M. Gnanambal ...	42
சத் சங்கம்—G. Shantha, B.A., B.T. ...	43
திருக்காட்டுப் பள்ளி இன்பச் செலவு—R. Saraswathi Bai ...	45
தீனபந்து சங்கம்—V. Sarojini ...	47
மாணவியரின் சிலவகை நோய்கள்—S. Thripurasundari, M.B., B.S. ...	49
समाचार पत्र—R. V. Rajalakshmi, VI-A. ...	1
व्यायाम—M. N. Revathi, VI-C. ...	1

PAGE

बरसात—T. V. Parvatham, VI-D. ... 2
ग्राम्य जीवन—P. Vimala, V-A. ... 2
भारत की राष्ट्र भाषा—V. Malathi, V-B. ... 3
गाय की पूजा—C. P. Nirmala. IV-A. ... 3
ग्राम सुधार—P. Anandavalli, IV-C. ... 4
नदियों से लाभ—S. Sarada, IV-D. ... 4

KARNA—V. S. Meenakshi, VI-A. ... 1
UMBRELLA—S. Bhanumathi, VI-A. ... 2
SIRDAR—L. V. Jayalakshmi, VI-B. ... 3
LIBRARIES—M. N. Revathi, VI-C. ... 5
CLOTHES MAKE THE MAN—R. Pattammal, VI-D. ... 5
THE MODERN MARVEL—G. Susila, V-A. ... 6
GOOD MANNERS—R. S. Saroja, V-B. ... 7
LAUGHTER—N. Sugantha, V-C. ... 8
THE HOLY CITY—B. Gowri, V-D. ... 8
OUR DUTY TO OUR COUNTRY—N. Saraswathi, IV-A. ... 9
THE NEWSPAPER—K. Sarada, IV-B. ... 9
THE POSTMAN—N. Pitchammal, IV-C. ... 10
MILK—N. Thylambal, IV-D. ... 11
MAHABALIPURAM—K. Malathi, III-A. ... 11
THE HORSE—N. Prema, III-B. ... 12
MY HOBBY—G. K. Visalakshi, III-C. ... 12
THE SQUIRREL—C. R. Premila, III-D. ... 13
FRUITS—S. Revathi, II-A. ... 13
THE ZOO—R. Syamala, II-B. ... 13
A SHOP—M. Prema, II-C. ... 14
FLOWERS—T. K. Indira, II-D. ... 14
THE COCOANUT TREE—P. S. Prema, I-A. ... 15
MY DOG—E. Nirupama, I-B. ... 15
BANGLES—S. Kalyani, I-C. ... 15
KAPALI TEMPLE—M. Kalpakam, I-D. ... 16
SCHOOL ANNIVERSARY AND PRIZE DISTRIBUTION—Chroniclers. 16
"SAVITHRI"—Rasikas ... 17
THE SIXTH INTERNATIONAL CONFERENCE OF SOCIAL WORKERS—Delegates ... 19
ANNUAL SPORTS MEET—Chroniclers ... 21
SEETHALAKSHMI FREE DISPENSARY—Kamala Rajagopalan ... 22
TEACHERS' UNION: 1952-'53—Chronicler ... 24
OUR ADULT SCHOOL—*Secretary, Adult School Committee* ... 26
THE EIGHTH ANNUAL EXHIBITION—*Secretaries, Exhibition Committee* ... 27
EDITORIAL NOTES ... 28
OUR SCHOOL DIARY ... 36

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE

Our Final Year Class: 1952-'53.

லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்தரப் பாடசாலைப் பத்திரிகை

மயிலை

Vol. XV | MARCH 1953

உழவின் உயர்வு

நம் தமிழ் நாடு மாபெரும் நாடு. அதில் தோன்றி மறைந்த பாவலர்கள் பலர். அவர்கள் எழுதிய நூல்கள் எண்ணிலடங்கா. அவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினைப் பற்றியும் இயற்றியுள்ளனர். உலகிலுள்ள ஒவ்வொரு பொருளினைப் பற்றியும், ஒவ்வொரு தொழிலினைப் பற்றியும், அவற்றின் இழிவு சிறப்புகளைப் பற்றியும் அவர்கள் பாடல்கள் மூலம் நாமறியலாம். அவர்களால் சிறப்பு மிக்கதெனப் போற்றப்பட்ட பொருள்களில் நாம் குறை கூறுதல் அறியாமையேயாம்.

தொழிலில் சிறந்த தென்று புலவர்களால் போற்றப்பட்ட தொழில் எதுவென்று ஆராய்வோம். முப்பாலில் நாப்பாலருளிய வள்ளுவனார் திருக்குறளில்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்,"

என்று கூறியுள்ளார்.

ஒரு மானிடனுக்கு மிக முக்கிய மானவைகள் ஊண், உடை, உறைவிடம் என்பனவாகும். அவற்றிலும் மிகமிக முக்கியமானது ஊணேயாகும். இதனை, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்னும் சொற்றொடர் மூலமாக அறியலாம். அவ்வூணினை உற்பத்தி செய்யும் வழிகளில் உழவுத் தொழிலும் ஒன்றாகும். தனக்கான ஊணினைத் தானே செய்து கொள்ளுதல் நலமாம். இதனையே, "உழவினைச் செய்து வாழ்க்கை நடத்துபவன் உரிமையான வாழ்வினைப் பெற்றவன்" என்றும், "பிற தொழில்களை மேற்கொண்டோன் அவ்வுரிமை யின்றி மற்றவன் கொடுப்பதைக் கைகட்டி வாங்கி, அவன் முன் வணங்கி வாய்புதைத்து நிற்பவன் ஆவான்" என்றும் கூறுகின்றார். இம்மட்டோடு விடவில்லை வள்ளுவனார். மேலும் உழவின் சிறப்புப் பற்றி விரிவாக அநேகக் குறட்பாக்களில் கூறியுள்ளார்.

வள்ளுவரை விட்டு ஔவையை நோக்குவோம். "உழுதுஉண்" என்றாள் ஔவை. "மனிதனாகப் பிறந்தவன் நிலத்தினை உழுது வாழக்கடவன்" என்று கூறுகிறாள். நல்வழியினை ஆராயுமிடத்து,

> ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே —ஏற்றம்
> உழுதுண்டு வாழ்வார்க் கொப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு.

என்று அறிகிறோம். ஆம்! ஆற்றங் கரையில் மரம் இருந்தால் ஆற்றில் வெள்ளம் வந்த விடத்து அம்மரத்தை அடித்துச் செல்லும். அது போலவே அரச சபையில் வீற்றிருக்கும் அரசன் தன் வாழ்வும் வீழ்ச்சியடையு மென்பதனை அறியாதோர் யாருளர்? இதனால் உழுதுண்டு வாழும் வாழ்விற்கு ஒப்பான ஒரு வாழ்வு இல்லை யென்பது தெரிகிறது.

நம் பழந்தமிழ் நாட்டிலே உழவு சீர்தூக்கி இருந்தது. அரசர்கள் உழவினை நன்கு போற்றி வளர்த்தனர். நாட்டில் வளம் கொழித்தது. பஞ்சம் பறந்தோடிற்று. "சோழ வளநாடு சோறுடைத்து," என்னும் முதுமொழியே இதற்குத் தக்க சான்றன்றோ!

ஆனால் தற்போது அதே தமிழ் நாட்டில் உழவின் நிலைமையை எண்ணுங்கால் உள்ளம் துடிக்கிறது. மழை பொய்த்தது; நாட்டில் எங்கும் பஞ்சம். இதற்குத் தக்க வழியினைக் கண்டு பிடித்தல் நம் கடனன்றோ! ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் நிலங்களை ஒன்று சேர்த்து, கூட்டுறவு விவசாயம் செய்து உழவர்கள் விளைவித்த பொருள்களை, மக்களனைவரும் சீரிய முறையில் பயன் படுத்துதல் அவசியம். நாளடைவில் நிலங்கள் முழுவதையும் தேசீய மயமாக்கி, இயந்திரங்கள் பலவற்றை உபயோகித்து விளைவினை அதிகரித்தல் வேண்டும். இது போன்ற பல முறைகளைக் கையாண்டால் நம்நாடு உலகிடைத் தலைசிறந்த நாடாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

C. P. கலாவதி, VI-A.

மந்தரை சூழ்ச்சி

தமிழில் மிகச்சிறந்த காவியங்களிலே கம்பராமாயணம் ஒரு தனிப் பெருமையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கம்பராமாயணத்திலே, மந்தரையெனும் கைகேசியின் செவிலித்தாய் இல்லையெனில் இராமாயணமே இல்லையெனக் கூறிவிடலாம். அவளது தூண்டுதலினாலேதான் இராமன் காட்டிற்குச் செல்ல நேருகிறது; அங்கே சீதாபிராட்டியாரை இராவணன் தூக்கிச்செல்ல, இராம இரா

வண யுத்தம் நடக்கிறது; இராவணன் அழிகிறான். மந்தரை இல்லாவிடின் இராமாவதாரத்திற்குப் பயனே இல்லாமலும் போயிருக்கலாம். இவ்வாறு கேவலம் ஒரு கூனி, கைகேசியின் தாதி மந்தரை, மிகப் பெருமையும் புகழும் பெற்ற இராமாயணத்திலே ஒரு தனியிடம் பெற்றுவிடுகிறாள்.

மந்தரை, இராமபிரானுக்கு முடிசூட்டுதலைத் தடுக்க எண்ணம் கொண்டமைக்குக் காரணம் இதுவாகுமென்று கூறப்படுகிறது. இளவயதிலே இராமன் தனது வில்லினால் கூனி மட்பானையில் தண்ணீர் கொண்டு செல்கையில் மண்உருண்டைகளைக் கொண்டு அடித்துத் தண்ணீரைக் கவிழ்த்து கூனியைப் பரிகசித்து விளையாடினான். 'விளையாட்டு வினையாகும்' என்பதற்கேற்ப, கூனி அச்செய்கையினை மனதிற்கொண்டு, அவனுக்கு உரிமையான அரசினையே தனது சொற்களினால் அவன் அடையாமல் தடுத்து, வஞ்சம் தீர்த்துக் கொள்கிறாள்.

இராமனுக்குப் பட்டாபிஷேக தினம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எங்கும் நகரை அலங்கரித்து அழகு செய்வதிலேயே மக்கள் முனைந்திருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே குதூகலம்தான்! அப்பொழுது, அங்கே வருகிறாள் மந்தரை. "இராவணன் செய்த தீவினைகள் யாவும் ஒரே உருவாகச் சேர்ந்து, மனித உருக் கொண்டு வந்து விட்டதோ!" என ஐயுறுமாறு இருக்கிறது அவள் தோற்றம்!

"இராமனுக்குப் பட்டாபிஷேகம்" என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனேயே கண்கள் சிவந்து போகின்றன மந்தரைக்கு. "இராமனுக்கா பட்டாபிஷேகம்?" என்று ஆச்சரியத்துடனும் அளவுகடந்த சீற்றத்துடனும் தன் துடிக்கும் நெஞ்சத்தையே கேட்டுக் கொள்கிறாள். இந்த வெகுளியின் காரணத்தால் அவளது உதடு மடிந்து போகிறது. எல்லையற்ற கோபத்துடன், கேகய அரசனின் புதல்வியான கைகேசியின் அழகுமிக்க மாளிகையினை நோக்கிப் போகிறாள், வேகமாக. ஆம்! சூழ்ச்சி செய்யத்தான்!

இருள் எங்கும் பரவிக்கிடக்கிறது. கைகேசியின் அரண்மனையிலே அவள் நித்திரை செய்து கொண்டிருக்கிறாள். "நான்கு கடல்களினின்றும் எடுக்கப்படும் முத்துக்கள், இரத்தினங்கள் இவை பூத்துள்ள பாற்கடலிலே வெண்மையான அந்த அலைகளின் நடுவே பவளக் கொடி யொன்று துவண்டு கிடப்பதைப் போல, வெண்மையான மஞ்சத்தில், முத்துக்களும் இரத்தினங்களும் பதித்த ஆபரணங்களை அணிந்தவளாய், தாமரை போன்ற முகத்தினை உடைய கைகேசி அயர்ந்து தூங்குகிறாள்," எனக் கூறும் கவியின் கூற்று நம்மை வியக்கச் செய்கிறது.

கூனி கைகேசியினது கால்களைத் தீண்டி எழுப்பி, "அறிவற்றவளே!

ராகு தன்னைப் பிடிக்க இருக்கையிலும் கூட மனம் தளராமல், குளிர்ந்த கிரணங்களை வீசி உலக மக்களை மகிழ்விக்கும் சந்திரனைப் போல, உன்னைப் பெருந் துன்பம் தேடி வருகையில் அமைதியாகத் தூங்குகின்றனையே ?" என்று கடிந்து கூற, கைகேசி "எனது அருமைப் புதல்வனாகிய இராமன் உள்ளபோது என்னை அணுகக் கூடிய துன்பமும் உளதோ?" என அலட்சியமாகக் கூறுவதினின்று இராமன்பால் கைகேசி கொண்டிருந்த அன்பின் அளவிட முடியாத தன்மை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்குகிறது. மேலும், அத்துணைத் தூய்மை வாய்ந்த கைகேசியின் மனத்தை மாற்றிய மந்தரையின் சொல் வன்மைதான் என்னே !

கூனிக்கு இதைக் கேட்டவுடன் சீற்றம் பொங்குகிறது. "என்ன வென்றா கேட்கிறாய் ? தாடகை யெனும் ஒரு பெண்ணைக் கொன்ற இழிவான செய்கையை உடைய உனது சக்களத்தியின் மகனை இராமனுக்கு முடிசூட்டப் போகிறார்களாம்," என்று தன் மனத்திலிருந்த வெறுப்பினையெல்லாம் ஒன்று சேர்த்து, சொற்களாக வெளியிடுகிறாள். அப்படிக் கூறியவுடன் கைகேசியின் மனம் மாறுபட்டு, தனது மைந்தனுக்கு அரசு இல்லையே என்று வருந்துவாள் என்பது கூனியின் எண்ணம் போலும் ! ஆயின் அவளது எண்ணம் பலிக்கவில்லை. இச் சுபச் செய்தியைக் கேட்டவுடன் கைகேசி மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் களிக்கிறாள். அவளது முகம் வெண்மையான கதிர்களை வீசும் சந்திரனைப் போன்று பிரகாசிக்கிறது. மகிழ்வுப் பெருக்கினால் தூண்டப்பட்டவளாய், ஓர் உயர்ந்த அழகிய நவரத்தின மாலையினைப் பரிசாக அளிக்கிறாள். என்னே அவளது பெருந் தன்மை !

கூனிக்கு அளவில்லாத சீற்றம் உண்டாகிறது. கைகேசி அன்புடன் அளித்த அந்த அழகிய மாலையினை நிலம் குழியும்படி விட்டெறிந்து, இராமன் முடிசூடினால் கைகேசியும் பரதனும் துன்பப்பட வேண்டுமென்று பலவாறு புகன்று, கைகேசியினது மனத்தைக் கலைக்கச் சூழ்ச்சி செய்கிறாள்.

ஆனால் இராமனைத் தனது அருமைப் புதவ்வனாகவே கருதியுள்ள கைகேசியா மனம் தளருபவள் ! அவளது செவ்வரி படர்ந்துள்ள கண்கள் கோபத்தினால் மேலும் சிவக்க, வெகுண்டு, "அறிவிலியே! பொருத்தமற்ற இழிவான சொற்களை நீ என் முன் கூறியதினால் பிழைத்தாய். வேறு யார் முன்னாவது நீ இவற்றைக் கூறி யிருப்பின், என்ன ஆகுமோ ? எனது செவிலித்தாய் என்றமையினால் உனது கொடுமை பொருந்திய நாவினைச் சேதியாது விட்டேன். என் முன்னிருந்து உடனே நீங்குவாயாக!" எனக்கூறினாள். கூனி அவ்விடத்தைவிட்டு அகன்றாளில்லை. மீண்டும் மீண்டும்

பழைய கொடிய வார்த்தைகளையே அவள் கூறலுற்றாள்.

கடைசியில் கூனியின் வார்த்தைகளால் கைகேசியின் மனம் மாறுபட்டு விடவில்லை. அவள் மனம் மாறுபட்டமைக்குக் காரணம் வேறென்று கூறும் கவியின் கூற்று நம்மை வியக்கச் செய்கிறது. கைகேசியின் மனம் மாறுபட்டது, தேவர்களின் சூழ்ச்சியும், அவர்கள் கடவுளிடத்தில் பெற்றுள்ள வரமும் அந்தணர்கள் இயற்றிய அருந்தவத்தின் பயனுமேயாம்," எனக் கம்பர் கூறுகிறார். ஏனெனில், "தூய்மையான கைகேசியின் மனம் மாறுபட்டிராவிடில் இன்று இராமனின் பெருமையை மூவுலகமும் உணர்ந்து வணங்கிப் போற்ற முடியுமா?" எனக் கம்பர் கேட்கிறார்.

மந்தரை சூழ்ச்சி, "கரைப்பார் கரைத்தால், கல்லும் கரையும்," என்ற உண்மையை நமக்கு நன்கு விளக்குகிறது. எனினும், கடைசியாகக் கம்பர் கூறுவதிலிருந்து, "எல்லாம் விதியின் செயலே," என்பதும், "தீமையிலும் நன்மை உண்டு," என்பதும் அறியப்படுகிறது.

N. வசந்தலக்ஷ்மி, VI-A.

மூன்று உண்மைகள்

ஒருநாள் இரவு பத்து மணியிருக்கும். நான் ஏதோ எழுதிக்கொண்டிருந்தேன். வாயிலில் ஒரு சிறு குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது. நான் சட்டென்று எழுதுவதை நிறுத்தினேன். அக் குழந்தையின் தாய் "தொலை, என் பிராணனை எடுக்காதே" என்று கத்தியது காதில் விழுந்தது. "பசிக்கிறதம்மா," என்று மறுபடியும் குழந்தை அழுதது. "காலையிலிருந்து தொந்தரவு செய்கிறாயே" யென்று அலுத்துக் கொண்டாள் அவள். அப்பொழுது என்தாய் என்னிடம் ஒரு வாழைப் பழத்தைக் கொடுத்தாள். நான் உடனே வாழைப் பழத்துடன் வாயிலுக்கு விரைந்தேன். "ஒரு பிடி சோறு போடம்மா" என்று கத்திக் கொண்டிருந்த அவளிடம் பழத்தைக் கொடுத்தேன். அவள் அதை வாங்கிக் கொண்டு குழந்தையிடம் வீசியெறிந்து மேலும் கடிந்து கொண்டாள். அக் குழந்தைமேல் தெருவின் நடுவில் படுத்துப் புரண்டு இன்னும் அதிகமாக அலற ஆரம்பித்தது.

அவள் ஏன் குழந்தையைக் கடிந்து கொள்ள வேண்டும்? என்ற கேள்வி என்மனதில் எழுந்தது. என் மனமே அதற்கு உடனே விடையிறுத்தது. அவள் காலையிலிருந்து கத்தியதால் ஏற்பட்ட தொண்டை வலியும், வயிற்றைக்

கிள்ளி யெடுக்கும் பசியுமே அவளை தன் குழந்தையிடம் வெறுப்பைக் காட்டுமாறு செய்திருக்கின்றன. நான் உள்ளே சென்று என் தாயின் அனுமதியுடன் சிறிது உணவு கொண்டு வந்து கொடுத்தேன். அவள் ஆவலுடன் காலியாயிருந்த தன் தகரக் குவளையில் அதை வாங்கிக் கொண்டாள். உணவு கிடைத்த மகிழ்ச்சியினால் "காலையிலிருந்து அலைகிறேன் அம்மா; ஒன்றும் கிடைக்கவில்லை" என்று நன்றியறிதலோடு கூறினாள். நான் அவள் நிலைக்கு இரங்கி, "பிச்சைக்குச் சென்றாலும் அதிர்ஷ்டம் வேண்டும்" என்று கூறினேன்.

அழுது புரண்டு அடம் செய்யும் குழந்தையை அன்புடன் அருகில் அழைத்து ஒரு பிடி சாதத்தை அளித்தாள். அதுவும் அடியை மறந்து 'அம்மா' என்று அருகிற் சென்று ஆவலுடன் உணவைப் பெற்றுக் கொண்டது. அவளும் ஆதரவுடன் குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

இந்நிகழ்ச்சியிலிருந்து உலகில் தாயன்புதான் சிறந்தது என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன். ஆழ்ந்து சிந்திக்கவும் இதிலிருந்து மேலும் இரு உண்மைகள் எனக்குப் புலப்பட்டன. பசிப்பிணி அன்னையும் வெல்லக் கூடியது யென்பது ஒன்று; ஒருவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அதிர்ஷ்டமே யென்பது மற்றொன்று.

B. கல்பகம், VI-B.

புலவரும் புரவலரும்

நம் பண்டை சரித்திர வரலாற்றை நோக்குங்கால் தமிழ்ப் புலவர் பலர் வறுமைப் பிணிக்கு ஆளாயிருந்ததும் தமிழரசர்களால் ஆதரிக்கப் பட்டமையும் புலனாகின்றன. மூவேந்தரும் கடையெழு வள்ளல்களும் தமிழிடத்தும் தமிழரிடத்தும் பேரன்புடையராய், தமிழை வளர்க்கப் பணி புரிந்தனர் என்பதும் அறியப் படுகின்றது.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் வறுமை நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அவர் குழந்தைகள் பசியால் துடித்தன. மனைவி செய்வகையறியாது திகைத்து வருந்தினாள். அதைக் காணப் பொறாத புலவர் குமண வள்ளலை நாடிச் சென்றார்.

குமணன் ஓர் சிற்றரசன். கடையெழுவள்ளல்களுள் ஒருவன். தமிழகம் வாழத் தண்ணளி செய்தவன். அத்தகையோன் உடன் பிறந்த தம்பி இளங்குமணன், அரியாசனத்தைக் கைப்பற்றி தன் ஆட்சிக்கு இடையூறு ஏற்படா வண்ணம் குமணனைக் காட்டிற்குத் துரத்தி விட்

டான். குமணன் செல்வமெல்லாமிழந்து காட்டில் மறைந்து வாழ்ந்தான். பெருஞ்சித்திரனார் அவரைத் தேடித்திரிந்து, காட்டிடையே கண்டு அடி தொழுது தம் வறுமையை வள்ளலுக்கு உணர்த்தினார். அதைச் செவியுற்ற குமணன் அந்நிலையிலும் தான் செய்யக்கூடிய உதவி ஒன்றுண்டு' என்று எண்ணி மகிழ்ந்தான். புலவரை நோக்கி "அன்ப! வருந்தற்க! என் உடன் பிறந்தோன் என் சிரத்தைக் கொய்து செல்பவனுக்கு பெரும் பொருள் கொடுப்பதாய் பறை சாற்றியுள்ளான். நீவிர் தடை கூறாது இக்கணமே என் சிரத்தைத் துணித்துச் சென்று பரிசில் பெறுவீராக! குமணன் தன் வள்ளன்மைக்கு இழுக்குத் தேடினான் என்ற பழிச்சொல் என்னைச் சாராது காப்பீராக," என்று கூறித் தன் உறை வாளை புலவரிடம் நீட்டினான்.

பெருஞ்சித்திரனார் தன் வறுமையைப் போக்க அரசன் உயிரையா கொள்வார்? நீட்டிய உறை வாளை வாங்கினார்; இளங்குமணனிடம் விரைந்து சென்றார்; தன் ஆத்திரம் தீர அவனை இழித்துக் கூறினார். இளையவன் தவறை உணர்ந்து வள்ளலை உடனே அழைத்து வந்து சிம்மாதனமேற்றி அவன் மன்னிப்புக்காக இறைஞ்சி நின்றான். புலவர், வேண்டிய பரிசில் பெற்று திரும்பினார் என்று கூறவும் வேண்டுமோ?

தமிழ்ப் புலவருக்குத் தம் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருந்தார்கள் அரசர்கள் என்ற உண்மையை அறியுமிடத்து, அக்காலத்தில் தமிழ் எத்துணை சிறந்த நிலையில் இருந்தது என்று தெரிகிறது.

N. S. கல்பகம், VI-C.

A. Leela,
Old Girl.

பகலவன் மறைவு

மாலை நேரம். ஆதவன் ஏழு புரவிகளைப் பூட்டிய ரதத்தைச் செலுத்திக் கொண்டு தன் கருமம் முடிவுற்றதெனக் குடதிசை நோக்கி விரைகின்றான். அப்பொழுது அவன் ஆடை பசும் பொன் நிறத்துடன் தகதகவென்று மின்னு மொளி, அவன் செல்லுகின்ற திசையிலிருக்கும் பொருள்களையெல்லாம் புதுமணப் பெண்போல் பொலிவுறச் செய்கின்றது.

ஓர் அழகிய கிராமம். அதன் நடுவில் அழகிய பூங்கா. பூங்காவில் பலவித மலர்கள் மணம் குறைந்து, சிறிது வாடிய முகத்துடன் இருக்கின்றன. என்ன காரணமோவென்று கேட்பதுபோல் அல்லி சிறிதே தலை நிமிர்கிறாள். அவள் கதிரவன் மறைவதைக் கண்டு களிப்புற்று, அன்பன் மதியின் வரவை எதிர் நோக்கி நின்று, கமலத்தைப் பார்த்து இறுமாந்து குறுநகை புரியும் காட்சியின் மாண்புதான் என்னே!

ஆதவன் செல்லுவதைக் கண்டு புள்ளினங்கள் தத்தம் இல்லம் செல்லவேண்டுமென்ற நினைவு வரப் பெற்றவை போலத் தங்கள் குடும்பங்களுடன் கூட்டமாக இன்னிசை பாடி குதூகலத்துடன் பறக்கின்றன. என்ன ஆச்சரியம்! இல்லத்தை நெருங்க நெருங்க இன்பத்தினால் அவன் வானவீதியைத் தன் செஞ்சுடர்களினால் செம்மையாக்கி மறைகின்றனன். குணதிசைக்கண் இருள் பரவுதலைக் கண்டு மாதர்கள் நீர் கொண்டுவர விரைகின்றனர். ஆற்றின் நீரோ, ஆதவன் இல்லம் செல்லுங்கால் நான் ஏனோ இங்கு இருக்க வேண்டுமென்று எண்ணுவது போல் உற்சாகம் குன்றி மெதுவாக ஓடிக் கொண்டே இருக்கிறது.

மேற்கிலுள்ள மரங்கள், மலைகள், குடிசைகள் முதலிய எல்லாப் பொருள்களும் செம்பஞ்சுக் குழம்பைப் பூசியது போன்று செம்மை நிறம் பெற்றுத் திகழ்கின்றன.

உழவர்கள் வயலில் வேலையை முடித்துக் கொண்டு தங்கள் இல்லங்களை நோக்கிக் களிப்புடன் செல்லுகின்றனர். அறுவடைக்குத் தயாராக நின்று கொண்டிருக்கும் நெல்மணிகள், ஆதவனைப் பரிவுடன் நோக்கி நல்வாழ்த்து நல்கிப் பிரியாவிடை பெற்றுக் கொள்வது போல் தங்கள் தலையைச் சிறிதே சாய்த்துக் கொண்டிருக்கும் அழகினை என்னென்று இயம்புவது?

S. கௌஸல்யா, VI-D.

கற்பின் சிறப்பு

நம் நாட்டில் பழங்காலத்திலிருந்து பெண்கள் கற்பையே தமது சிறந்த அணிகலனுகக் கருதி வந்தனர். கற்புடைய மகளிர் தமது கணவரையே தெய்வமாக வழிபடுவார்களே யன்றி பிறதெய்வங்களை வணங்க மாட்டார்கள். இதைத் திருவள்ளுவர்

"தெய்வந்தொழாஅள்
கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை,"

என்று கூறிச் சிறப்பித்துள்ளார். கற்புடைய பெண்டிரின் சிறப்பைப் பற்றிக் கூறும் வேறு பல இலக்கியங்களும் இருக்கின்றன.

கற்புடைய பெண்டிர் மூவகைப் படுவார். தங்கள் கணவர் இறந்தனரென்று அறிந்தவுடன் தம் உயிரையும் நீக்கிவிடும் இயல்பினையுடையவர் முதல் வகையினர். இதை 'தலையாய கற்பு' என்று சிறப்பித்துக் கூறுவர். இரண்டாவது வகைக் கற்பையுடையவர்கள் தம் கணவருடன் சிதையேறுவார். அச்சமயம் அவர்கள் சிதையைத் தீயாகக் கருதாமல் குளிர்ந்த தடாகமெனக் கருதி மகிழ்வுடன் தீப்புகுவார். இவ்விதம் உடன் கட்டை யேறுதலை 'ஸககமனம்' என்பார். மூன்ருமவர், மறு பிறவியிலாவது தம் கணவருடன் கூடி வாழ்தல் வேண்டுமென்று இறைவனை வேண்டி, கைம்மை நோன்பு இயற்றுவர். அந்நோன்பு இயற்றுபவர்கள் நெய், மலர், படுக்கை இவற்றை விரும்பார். இலைக்கறியையே உண்பர்.

எதாவது ஒரு காரணம் பற்றித் தம் கணவருக்கு அநியாயமாகத் தீங்கு எற்பட்டால், ஆற்ருச் சீற்றங் கொண்டு தம் கற்பின் திறத்தால் தீங்கிழைத்தவர்களைத் தண்டிப்பர். வீரப் பெண்களது கற்பை 'மறக் கற்பு' எனச் சிறப்பிப்பர்.

பெண்களின் வீரத்திற்கும், கற்பிற்கும் கண்ணகியின் வரலாறு சிறந்த சான்ருகும். நீதி தவறி, தன்கணவனை அநியாயமாகக் கொன்ற பாண்டியனுக்கு, தன் கணவன் கள்வன் அல்லன் என்ற உண்மையை உணர்த்தினுள். நீதி தவறிய பாண்டியன் உயிர் துறந்தான். இதைக் கண்டு திருப்தியடையாத கண்ணகி, தன் கற்பின் மகிமையால் பழைமையான நாகரிகம் பொருந்திய மதுரைமாநகரை எரித்தாள். கண்ணகியின் கற்பின் திறம் உலகெங்கும் பரவியது.

உடன்கட்டையேறித் தம் கற்பை நிலை நாட்டியதற்குப் பூதபாண்டியன் தேவியின் வரலாறு தக்க சான்ருகும். தன்னைத் தடுத்த சான்ரேருக்கு அறமுணர்த்தி, சிதையைக் குளிர்ந்த தடாகமெனக் கருதி தீப் பாய்ந்தாள். பழங்கால இராஜ புத்திரப் பெண்மணிகள் வீரத்துடன் கற்பையும் சிறப்பாகப் பெற்றிருந்தனர். போரில் தங்களது கணவர் இறப்பின் மனைவியர் சிதையேறி உயிர்துறப்பார் என்பது சரித்திர வாயிலாகப் புலனுகிறது.

நளாயினிதேவியின் வரலாறும் கற்பின் சிறப்பை எடுத்துரைக்கும்.

தன்னை உயர்த்துங் கருவி தானேயிரவான்

கற்பின் மகிமையால் சூரியனை உதயமாகாது தடுத்துத், தன் பெருமையை உலகமறியச் செய்தாள். இது பெண்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

கரிகால்வளவனுடைய பெண்ணான ஆதிமந்தி, ஆட்டங்களிலும், ஆண்மையிலும் அழகிலும் சிறந்த ஆட்டனத்தி என்பவனை மணந்தாள். அவனை அரசலாறு அடித்துக் கொண்டு போனபொழுது இவள் கரையில் நின்றுகொண்டு அழுது புலம்பினாள். இவளது கற்பின் சிறப்பால் அலை அவனைக் கரையோரமாகக் கொண்டு வந்து சேர்த்தது. கடலே கற்பிற்குக் கட்டுப் பட்டதெனின் அதன் திறத்தைக்கூற இயலுமோ!

கற்புடைய பெண்கள் மழையைப் பெய் என்றால் பெய்யும்; நில் என்றால் நிற்கும். அவர்களை எந்த விதமான நெருப்பும் சுடாது. சாவித்திரி தன் கற்பின் சக்தியாலன்றோ எமனோடு போராடி இறந்த கணவனையே உயிர் பெறச் செய்தாள்.

கற்புடைய பெண்டிரைத் தமிழ் நாட்டினரும் அன்றி மற்றோரும் தெய்வமாக வழிபட்டனர். தமிழர், கற்புடைய பெண்டிர் இறந்தவிடத்து கல் நட்டுப் பூசித்தனர். மங்கலத்தோடு இறந்த பெண்களைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் இன்றும் நம் நாட்டில் இருந்து வருகிறது.

கற்புடைய பெண்டிரின் அரிய செயல்களைப் பற்றிப் புலவர்கள் பல காவியங்களும், செய்யுட்களும் இயற்றியுள்ளனர். கற்புடைய பெண்கள் என்றென்றைக்கும் அழியாப் புகழ் எய்துவர் என்பது உறுதி.

R. பட்டம்மாள், VI-D.

நகைச் சுவை

சுவைகள் இரு வகைப்படும். அவையாவன:—நாவினால் நுகரப்படும் ஆறு சுவைகளும், செவியினால் நுகரப்படும் குண அலங்காரங்களாகிய சொற்சுவைகளும், ஒன்பது வகைப் பொருட்சுவைகளுமாகும்.

நகைச் சுவையானது ஒன்பது வகை பொருட்சுவைகளுள் ஒன்றாகும். சுவைகளுள் சிறந்தது நகைச் சுவையே. இக் காரணம்பற்றியே தொல்காப்பியர் நகையை முதலில் வைத்து சூத்திரம் செய்துள்ளார். காப்பியங்களில் அமைந்துள்ள நகைச் சுவைகளை எவ்வளவு முறை படித்தாலும் நகை உண்டாகும். ஆனால் பத்திரிகைகளில் வரும் துணுக்குகள் முதன்முறை படிக்கும் பொழுதுதான் நகை உண்டாகும்.

திருவாடுதுறை, திருப்பனந்தாள் போன்ற இடங்களில் உள்ள மடங்

களில், புலவர்கள், மிக்க தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள். ஒரு முறை இவ்வகை மடத்தைச் சார்ந்த புலவரொருவர் பண்டார சந்நிதிகளைக் காணச் சென்றார். புலவரது உடல் வஞ்சனையற்று வளர்ந்திருப்பதைக் கண்ட பண்டார சந்நிதிகள் "கல்விக் கிரகமே" என்று இரு பொருள்பட புலவரை அழைத்தார். இதை, "கல்வி+கிரகம்" என்றும், "கல்+விக்ரகம்" என்றும் பிரிக்கலாமல்லவா? இதன் பொருளைத் தெற்றென உணர்ந்த புலவர் அவரை, "வேந்தன் மடத்தடிகளே!" என்றார். 'மடத்தடிகளே!' என்பது, "மடத்து+அடிகள்" என்றும், "மட+தடிகள்" என்றும் இரு பொருள்படும்.

இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதியென்ற அரசனிடம், தன் புலமையை சீனிப்புலவர் என்பவர் காட்ட, அதை வியந்து அரசன் பொற்காசுகளையும், பட்டாடைகளையும் ஒரு தட்டில் வைத்துப் புலவரிடம் கொடுக்க, அதைப் பெற்றுக் கொண்ட புலவர் நகைச் சுவை தோன்றுமாறு, "தட்டு இவ்விடத்திற்கோ? அவ்விடத்திற்கோ?" என்றார். இதைக் கேட்ட அரசன் உடனே அதன் பொருளை உணர்ந்து "தட்டு அவ்விடத்திற்கே!" என்றார். இதனின்றும் அக்காலத்தில் புலவர்கள் மட்டுமின்றி அரசர்களும் புலமை பெற்றுத் திகழ்ந்தனர் என்று அறியலாம்.

மற்றொருநாள் அருந்தமிழ்ப் புலவர் ஒருவர் சேதுபதியின் கொடைத் திறனை அறிந்து செந்தமிழ்ப் பாட்டொன்றை இயற்றிக்கொண்டு, அவரைக் காணச் சென்றார். சேதுபதியின் சபையில் நான்கு புலவர்கள் இருந்தனர். அவர்களில் முதல்வர் ஒரு பாட்டை ஒரு முறை கேட்டால் திரும்பச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர். இரண்டாமவர் இரு முறை கேட்டதும், மூன்றாவது புலவர் மும்முறை கேட்டதும், நான்காவது புலவர் நான்குமுறை கேட்டதும் திரும்பச் சொல்லக்கூடியவர்கள். அருந்தமிழ்ப் புலவர் சேதுபதியிடம், தான் இயற்றிய பாடலைப் பாடிக் காட்ட, அதைக் கேட்ட சேதுபதி, "இப்பாடல் என் அவைப் புலவர்கட்கு முன்பே தெரியும்," என்று கூறி முதல் புலவரைப் பார்க்க, அவர் முகக்குறிப்பை உணர்ந்த புலவர் ஒரு முறை கேட்டமையால் உடனே அப்பாடலைப் பாடிக் காட்டினர். அவ்வாறே மற்ற மூவரும் முறையே அப்பாடலைப் பாடினர்கள். இதைக் கண்ட புலவர் திகைத்தார். உடனே சேதுபதி நகைத்து, தான் செய்த சூழ்ச்சியை புலவருக்கு விவரித்தார். பின்பு அவருக்கு ஏராளமான பரிசளித்து அனுப்பினார்.

இவ்வாறாகப் பழங்கால மன்னர்களும், அறிவும், புலமையும், நகைச் சுவை தோன்றப் பேசுந் திறமையும், சிலேடையாகப் பேசும் வன்மையும் ஒருங்கே அடையப் பெற்றுத் திகழ்ந்தனர். வாடிய மனத்தையும், தளர்ந்த உடலையும் தளிர்க்கச் செய்வது நகைச் சுவையேயாம். தற்

காலத்திலும் அநேகர் நகைச் சுவைபடப் பேசவும், எழுதவும் ஆற்றல் வாய்ந்தவர்களாக உள்ளனர். நகைச் சுவையுடன் பேசும் ஆற்றலும், எழுதும் ஆற்றலும் நம்மிடையே இருத்தலவசியம்.

R. கல்பகம், V-A.

கல்வி

கற்றலாகிய தொழிலும், கற்கப் படுவனவாகிய நூல்களும், கற்பதனல் எய்தும் பயனும் ஆகிய இம் மூன்றுமே கல்வியென்று அழைக்கப்படும்.

கற்றலானது இரு வகைப்படும். ஒன்று கல்வியிற் சிறந்த ஒருவரிடத்தே சென்று, செல்வர்முன் வறியவர் போல் பணிந்து நின்று கல்வி கற்றல். மற்றொன்று, தான் கல்வியைக் கற்காவிட்டாலும், கற்றறிந்தவர்களிடத்தே சென்று அவர்கள் கூறும் உறுதிப் பொருள்களைக் கேட்டறிந்துகொளல். சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் குற்றமறக் கற்று அவற்றின் படி ஒழுக வேண்டும்.

கல்வியானது இருபாலர்க்கும் அவசியம். இதனை விளக்க,

> "குஞ்சியழகும் கொடுந்தானைக்
> கோட்டழகும்
> மஞ்சளழகும் அழகல்ல
> —நெஞ்சத்து
> நல்லம் யாம் என்னும் நடுவு
> நிலைமையால்
> கல்வியழகே யழகு"

என்ற செய்யுள் நாலடியாரில் காணப்படுகின்றது. கல்வியே ஒருவர்க்குச் சிறந்த அழகாகுமென்பதை இச் செய்யுள் விளக்குகின்றது.

கல்வியானது அழியாத செல்வமாகும். இது கள்வர், வலியர், பங்காளிகள் முதலியோரால் கவரப்பட மாட்டாது. இது கொடுக்கக் கொடுக்க விருத்தியாகுமேயன்றி, குறையாது. அரசர்கள் சினங்கொண்டால் செல்வத்தை அபகரிப்பது போல் இதை அபகரிக்க முடியாது. கல்விக்கு முடிவே கிடையாது. இதனைக் கற்பவர்களாகிய நமது ஆயுள் நாட்களோ மிகவும் குறைவு. அந்தக் குறைந்த நாட்களிலும் நோயால் துன்பமுறும் நாட்கள் பலவன்றோ? ஆதலால் பயனுடைய சிறந்த நூல்களை ஆராய்ந்து கற்றல் வேண்டுமென்று கூறுகின்றனர் பெரியோர்.

கற்றலின் பயனாவது, தாம் கற்றவண்ணம் நடந்து கொள்ளுதலாம். எண்ணும், எழுத்தும் கற்றவரே அறம் முதலிய உறுதிப் பொருள்களைக் காணுதற்கு ஏற்றவராவர். கற்கப்படும் நூல்களுக்கு, எண்ணும், எழுத்தும் கருவிகளாம். எனவே, 'கணிதமும், இலக்கியமும் ஒருவர்க்

குக் கண்' என அறிவுடையோர் போற்றுவர்.

உடல் தளர்ந்தவர்க்கு ஊன்று கோல் துணையாவதுபோல, அறிவுடையோர் வாயிலாகக் கேட்ட கேள்வியறிவு, மனத்தளர்ச்சி உண்டாகும்போது அத்துன்பத்துள் ஆழ்ந்து விடாமல் காத்து மன உறுதியை அளிக்கும். ஆதலால் கற்றலினும் கேள்வியறிவே சிறந்ததென்று கருதப்படுகின்றது. கல்வியின் உயர்வைத் திருவள்ளுவர்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி
ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து."

என்று கூறியுள்ளார்.

சிறந்த கேள்வியறிவுடையவரும், பகைமையற்றவரும், வலிமையுடையவருமாகிய அறிவுடையோர் குழுவில் ஒருவர் கலந்து மகிழ்வது தேவருலக இன்பத்தினும் சிறந்ததாக இருக்குமென்று நாலடியார் கூறுகின்றது. 'கற்றல்' என்பதன் பொருளாவது உண்மைப் பொருளை நல்லவர்களுடன் சேர்ந்து பலகாலம் பழகுதலென்பதாகும்.

கல்வி கற்றவர், எவராக இருப்பினும் அவர் அதன் பயனைப் பயனையும், பெருமையும் அடைவர். இடைக்காலத்தில் கல்வியின் பெருமையை உணராத சிலர் பெண்களுக்குக் கல்வி கற்பித்தல் தவறென்ற கொள்கையை ஏற்படுத்தினார்கள். அதன் பயனைக் கல்வி கற்காமல் பாழடைந்தவர்கள் பலர். அறுபத்தி நான்கு கலைகளும் கல்வியின் பல பிரிவுகளாம். இதன் பயனை எடுத்துரைத்து, கல்வியினைக் கற்கும்படி எல்லோரையும் ஊக்குதல் கல்விகற்றோரின் கடமையன்றோ?

கல்வியிற் சிறந்த நாடே என்றும் புகழ்பெற்று விளங்கும். ஆதலின் நம் நாடு மேன்மையுற, கல்வியைக் கற்பதும், காப்பதும் நம் கடமையாகும்.

R. கோகிலம், V-B.

D. Sashikala, II-A.

கலையும் தொழிலும்

அழகிய சோலையில் நெடுமரம் ஒன்று பூத்துக் காய்த்துக் கனிந்து நிற்கிறது. மலரின் மணம் எங்கும் பரந்து இன்பத்தைத் தருகிறது. நெடுந்தூரத்தில் வரும் மனிதரைத் தன்பால் இழுக்கும் சக்தி அம்மரத்திற்கு இருக்கிறது. மரத்தின் கிளைகள், வேர்கள், யாவும் நன்கு வளர்ந்து உறுதி பெற்றுள்ளன. ஆழ்ந்து சென்ற வேரும், படர்ந்து சென்ற கிளைகளும் அம்மரத்தின் வளர்ச்சியை அளவிட்டுரைக்கின்றன. அம்மரத்திற்குப் பெருமை வேரினாலும் கிளையினாலும் வந்ததா? மலரினால் வந்ததா? மரத்திற்குப் பெருமை சந்தேகமில்லாமல் மலரினால் உண்டாவது தான். வேரும், கிளையும் மலருக்கு ஆதாரமாக இருந்தாலும் அம்மரத்திற்குப் புகழைத் தருவது மலரே யாகும். ஆனால் அந்த மலரின் மணமும், பொலிவும் வேரினாலும், கிளையினாலும் தான் உண்டாகிறது.

தொழிலுக்கும் கலைக்கும், வேரையும் மலரையும் உவமானமாகக் கூறலாம். ஒரு நாட்டின் பெருமைக்குக் காரணமாக இருப்பது அந்நாட்டின் கலைவளர்ச்சியே யாகும். எத்தனையோ ஆண்டுகளாகப் பண்பட்டு வந்த சமுதாயத்தில் தான் கலைவளர்ச்சி உண்டாகும். உடல்வளப்பம் மாத்திரம் கலைக்குப் போதாது. உள்ளத்தின் வளப்பமும் வேண்டும். காவியம், சிற்பம், ஓவியம், இசை ஆகிய கவின் கலைகள் பண்பட்ட உள்ளத்தில் தான் பிறக்கின்றன.

ஒரு நாட்டில், கலை மலர்ச்சி அடைய வேண்டுமானால், அவ்விடத்தில் முதலில் தொழில் மலர்ச்சி அடைய வேண்டும். வேர் ஊன்றிக் கிளைபரந்து, ஒரு மரத்தில் மலர் தோன்றுவது போல் கலையும், தொழில் வன்மை மிகமிக, வளர்ச்சி அடைந்தபிறகே மலரும். ஆயிரம் தொழிலாளர் கூடிய சமுதாயத்தில் அவர்களுடைய தொழில் முயற்சியினால் ஒரு கலைஞன் பிறப்பான். ஆகையால் தொழிலாளர்கள் ஒரு நாட்டிற்கு வேரைப் போன்றவர்கள். கவிஞர்கள் மலரைப் போன்றவர்கள். நாட்டில் பலவகைத் தொழில்களும் சிறப்புற வேண்டும். வெறுந் தொழில்களே மலிந்திருந்தால் மனிதனுடைய வாழ்வில் சுவை இராது. கலையும் ஒரு நாட்டில் சிறப்புற்றிருக்க வேண்டும். கலையினால் தான் மனிதன் இப்பிறப்பில் இன்பம் காண முடியும். நித்தியமான அழகைத் தருவது கலை, செல்வத்தைத் தருவது தொழில்; கலை இன்பத்தைத் தரும், தொழில் ஊக்கத்தைத் தரும். கலை அமைதியை அளிக்கும். தொழிலும், கலையும் வளர வேண்டுமென்பதே நம் நாட்டினர் குறிக் கோள். பாரதியார் தொழிலும், கலையும் ஒருங்கே வளர வேண்டு மென்று கூறியுள்ளார். தொழிலுக்கும், கலைக்கும் தெய்வமாகிய கலைமகளை நம் நாட்

டில் நவராத்திரியில் கொண்டாடுகி ருர்கள். ஸரஸ்வதி பூஜையன்று, கலைஞர்கள் கலைமகளை வழிபடுகிருர் கள். அடுத்த நாளை, ஆயுத பூஜை யென்று தொழிலாளிகள் கொண் டாடுகிருர்கள். இதை நினைவுறுத் தியே பாரதியாரும்,

“ கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர்
தெய்வம் ”

என்று கூறியுள்ளார்.

தொழில் நிரம்பியும் கலைநிரம்பா விடில் மலர் இல்லாத மரம்போல நாடு இருக்கும். ஆதலின் தொழி லின் பயனும், கலையின் இன்பமும் ஒருங்கே அடைய வேண்டும் என் பதைக் கருதியே நம் நாட்டினர் கலைமகளை நவராத்திரி யன்று கொண்டாடுகிருர்கள்.

P. V. அம்புஜம், V-C.

ஆசு கவி காளமேகம்

வெண்பாவிற் புகழேந்தி ;
பரணிக்கோர் சயங்கொண்டான்
விருத்தம் என்னும்
ஒண்பாவிற்குயர் கம்பன் ; கோவை
உலா அந்தாதிக் (கு) ஒட்டக்
கூத்தன் ;
கண்பாய கலம்பகத்திற் (கு)
இரட்டையர்கள் ; வசை பாடக்
காளமேகம் ;
பண்பாய பகர்சந்தம் படிக்கா(சு)
அலா தொருவர் பகரொணுதே ;

மேற்கூறிய செய்யுளிலிருந்து காளமேகப் புலவர் வசை பாடுவதில் நிகரற்றவர் என்பது நன்கு புலனு கும். கார்மேகம் மழை பொழிவது போல் இவர் பல பல பாக்களைத் தங்கு தடையின்றிப் பொழிவாராம். அதனுல் இவருக்குக் காளமேகம் என்ற சிறப்புப் பெயர் உண்டா யிற்று. ஆனல் இவருக்குப் பெற் ரேர் இட்டு வழங்கிய பிள்ளைப் பெயர் “ வரதர்.” என்பதாகும்.

ஒரு சமயம் காளமேகம் நாகை யின்கண் காத்தான் சத்திரத்தில் உண்டு இளைப்பாற வந்தார். அவ் வமயம் பரிசாரகப் பிராமணன் ஒரு வன் அவருக்கு உணவு விரைவிற் தருவதாகக் கூறி, நெடுநேரம் பசிப் பிணியால் வருந்துமாறு விடுத்த னன். அப்பொழுது புலவர் சினம் தாங்காமல்,

“ கத்துக் கடல் சூழ நாகைக் காத்தான்
சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசி வரும் ;
—குற்றி
உலையிலிட ஊரடங்கும் ; ஓரகப்பை
அன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்.”

என்று ஒரு வசைகவி இசைத் தனர்.

மற்றொரு சமயம் நமது புலவர் மதுரைக்குச் சென்றிருந்தார். அங்கு, காளமேகம் திருமலைராய னைக் காண்பதற்கு அவரது சமஸ்

தானத்திற்குச் சென்றார். அங்கேயிருந்த புலவர் அனைவரும் இவரைப் பொருட் படுத்தாமல் புறக்கணித்தனர். ஆனால் காளமேகம் கலைமகள் கமலச் சேவடியைக் குறித்து முப்பது வெண்பாக்கள் பாடினார். அவ் வமயம் அரசனது சிம்மாசனத்திற்கருகில் ஒரு ஆசனம் தோன்ற அவ்விருக்கையின்மீது நன்கு அமர்ந்து கொண்டார். பின்பு புலவர் ஏனைய புலவர்களை நோக்கி "நீவிர் யாவர்" என்று வினவினர். உடனே அவர்கள் "நாங்கள் கவிராயர்கள்" என்றார்கள். அது கேட்ட காளமேகம் வேறொரு குறிப்பை உட்கொண்டு, நகைத்து, "ஓ! நீங்கள் கவிராயர்களா?"

"வாலெங்கே நீண்ட வயிறெங்கே
முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த
கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்
நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்."

என்று இகழ்வாகப் பாடினார். பின்பு காளமேகத்திற்கும் அதிமதுர கவிக்கும் பல போட்டிகள் நடந்தன. எல்லாவற்றிலும் காளமேகம் அதிமதுர கவியைத் தலை குனியச் செய்தார்.

பிறகு அங்கு அமர்ந்திருந்த ஒரு புலவர் திருமலைராயன் வாளைச் சிறப்பித்து ஒரு செய்யுள் இயற்றுக என்னலும், காளமேகம்,

"செற்றலரை வென்ற
திருமலைராயன் கரத்தில்
வெற்றி புரியும் வாளே வீர வாள்:
—மற்றயவாள்
போர்வாள் வருவாள் புகுவாள்
புறப்படுவாள்
ஆவாள் இவாள் அவாள் ஆம்."

என்று பாடினார். அங்கிருந்த புலவர்களும் திருமலைராயனும் இதைக்கேட்டு காளமேகத்தைக் கொண்டாடினர். அரசன் இவருக்குப் பல பரிசுகளை வழங்க, புலவரும் மனமகிழ்ந்தார்.

காளமேகம் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய பல செய்யுட்களில் கடை மொழி மாற்றம் ஒன்று. அதாவது:—

"மாடுதின்பான் பார்ப்பான்
மறையோதுவான் குயவன்
கூடிமிக மண்பிசைவான்
கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கான்
எண்ணெய் விற்பான் வண்ணான்
பரும்புடவை தப்பும் பாறை."

சின்னாட் சென்ற பின்னர் புலவர் பெருமான் தமது பதியையடைந்து பல்லாண்டு இன்புற்று வாழ்ந்திருந்து சிவபிரான் திருவடி நிழலில் இறண்டறக் கலந்தார்.

A. பிச்சம்மாள், V-D.

ஏழை

இல்லாமலிருப்பவனை ஏழை யென்கிறோம் ஆனால் இல்லையென்பது எது? இதற்கு விடையிறுப்பது மிகக் கடினம். பலர், பொதுவாக பொருளில்லாமையையே ஏழ்மையெனக் கருதுகின்றனர். இங்கும், 'எப்பொருள்' என்னும் கேள்வி எழுகின்றது. ஏனெனில் இம்மையில் ஒரு மனிதன் அடையக் கூடிய பொருள்கள் பலவுள. அவற்றில் 'பணம்' ஒன்றையே மக்கள் பெரும்பாலும் பொருளெனக் கருதுகின்றனர். ஆயின் இது முற்றும் பொருத்தமுடையதன்று.

கல்வி, செல்வம், புகழ், நோயற்ற வாழ்வு, மக்கட்பேறு மற்றும் இவை போன்ற செல்வங்கள் பொதுவாக 'பொருள்' என்ற சொல்லால் குறிக்கப் படுகின்றது. அதனால் மேற் கூறியவற்றில் ஏதாவது ஒன்று ஒருவனிடம் இல்லையெனின் அவனையும் ஏழையென்று கருத வேண்டும்.

இம்மைக்கும், மறுமைக்கும் ஒருவனுக்குப் பயன்தரக்கூடியது கல்விச் செல்வமே யாகும். கல்வியின் சிறப்பை யாவரும் அறிவர். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு ஏற்படுகிறது. கல்வியற்றவனிடம் இருக்கும் செல்வம் அவனுக்கும், ஏனையோருக்கும் பயன்படாமல் மணமற்ற மலர் போல் போகின்றது. ஆதலின் கல்வியின்றி செல்வத்தைப் பெற்றிருப்பினும் ஏழையேயாவான்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்று வள்ளுவனார் கூறுவதிலிருந்து புகழும் மக்கள் அடையக் கூடிய பேறுகளில் மிகவும் இன்றியமையாதது என்பது பெறப் படுகிறதன்றோ. எனவே புகழுக்கு ஏதுவான பல நற்குணங்கள் அமையப் பெறாதவனும் ஏழையே யாவான்.

எல்லாப் பேற்றையும் பெற்ற ஒருவன் நோயுற்றவனாயிருப்பின் தான் பெற்ற செல்வங்களின் பயனை இழந்து விடுவான். இதனால் தான் நோயற்ற வாழ்வை "குறைவற்ற செல்வம்" என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

சான்றோர்கள், ஒருவனுக்கு 'மக்கட்பேறே' சிறந்த செல்வமெனக் கூறுகின்றனர். இம்மை, மறுமைக்கு இன்பம் வருவதும் அப்பேறே யாகும் என்றும், அதை அடையாதவர்கள் 'புத்' என்னும் நகரத்தில் போய்ச் சேர்வர் என்றும் கூறுவதனால் அதனைப் பெறாதவர் மற்ற செல்வங்களைப் பெற்றிருப்பினும் "இல்லாதவர்" என்றே உலகத்தோரால் கருதப்படுவர்.

இவற்றை நோக்குமிடத்து பணமில்லாதவனை மட்டும் எழையென்று கூறுவது பொருந்தாது என்பதும், உலகிலுள்ள ஒவ்வொருவனும் ஒவ்வொரு வகையில் ஏழையே யென்பதும் பெறப் படுகிறதல்லவா?

S. பார்வதி, IV-A.

உல்லாசப் பிரயாணம்

சென்ற பொங்கல் விடுமுறையில் நாங்கள் எல்லோரும் பூனைவிற்குச் சென்றோம். நாங்கள் அங்கு ஓர் உணவு விடுதியில் தங்கினோம். பூனைவில் எங்களுக்குத் தெரிந்தவர் அநேகர் இருந்தனர். ஒவ்வொருவர் வீட்டிலும் சிலமணி நேரம் தங்கினோம். போகிக்கு முதல் நாளன்று நாங்கள் அனைவரும் 'மலவலி' என்னும் கிராமத்தில் அமைந்துள்ள 'கேரளர்' மலைக்குகைகளுக்குச் சென்றோம். அது பூனைவிலிருந்து சுமார் ஐம்பது கல் தூரத்திலுள்ளது. அது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒருபிரிவாகும். புகைவண்டியில் செல்லும்போது இயற்கை எழிலைக் கண்டு இன்புற்றுக் கொண்டே சென்றோம்.

அங்குள்ள ஓர் அழகிய மண்டபத்தில் நாங்கள் தங்கி, பிற்பகல் போஜனத்தை முடித்துக் கொண்டு பல இடங்களையும் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். அவ்விடத்தில் பல பாழடைந்த கிணறுகள் இருந்தன. அம்மண்டபத்துச் சுவற்றில் பல அழகிய சித்திரங்கள் வரையப் பட்டிருக்கின்றன. அவற்றில் மராட்டியரின் இஷ்ட தேவியான 'பவானி தேவி'யின் உருவச்சிலையும் உள்ளது. மராட்டியர் அங்கு வந்து தேவிக்குப் பூஜை செய்த அறிகுறிகள் தென்படுகின்றன. அச்சிலை மீது குங்குமத்தை வாரியிறைத்திருந்ததினால் உருவம் சரியாகப் புலப்படவில்லை. மற்றும் பல தெய்வங்களின் உருவச்சிலைகள் அங்கு இருந்தன. அம்மண்டபம் மிக்க ஒளியுடன் காண்போர் கண்களைக் கவரும்படியாகவும் இருந்தது.

அம்மண்டபத்திற்கு அண்மையில் மற்றொரு பெரிய மண்டபம் உள்ளது. அதன் வாயிலில் ஓர் அசோக ஸ்தூபி அமைந்துள்ளது. அதனருகில் ஓர் அசோக மரமும் வளர்ந்திருக்கின்றது. பல கல்யானைகள் அம்மண்டபத்தின் வாயிலில் அதைக் காப்பதுபோல் அமைந்துள்ளன. அம்மண்டபத்தைச் சுற்றி உள்ளும் புறமும் பல அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. அவை பழங்காலத்து மகாராஷ்டிர மன்னர்களின் ஆட்சியைக் குறிப்பனவாய் இருக்கின்றன. அந்த மண்டபத்தின் மத்தியில் ஒரு 'புத்த பீடிகை'யும், அதன் மேல் ஒரு குடையும் இருக்கின்றன. அது புத்தமதத்தின் சீர்மையைக் குறிக்கிறது.

பிறகு அங்கு தோன்றும் ஓர் ஒற்றையடிப் பாதைவழியே சென்றோம். அது மிகவும் உயரமான இடத்தில் உள்ளது. நடந்து செல்லக் கைப்பிடி கிடையாது. அதன் வழியே வெகு ஜாக்கிரதையாகச் சென்றோம். நெடுந்தூரம் சென்றதும், அப்பாதையில் 'மேலே செல்லக் கூடாது' என்று எழுதியிருந்தது. ஆகையினால் வந்த வழியே திரும்ப நேர்ந்தது. திரும்புகையில் வழியிலுள்ள ஏரியிலிறங்கி அந்தச்

சுவை மிக்க நீரைப் பருகினேம். பிறகு நாங்கள் தங்கியிருந்த மண்டபத்தை அடைந்து சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு குன்றினின்றும் கீழேயிறங்கினேம். அங்குள்ள ஒரு சிற்றுண்டிச் சாலையில் சிற்றுண்டி அருந்திவிட்டு 'மலவலி' புகை வண்டி நிலையத்தை அடைந்தோம். அன்று புகைவண்டி வர சற்றுத் தாமதமானதால் நிலையத்தை நன்ருகச் சுற்றிப் பார்த்தோம். வண்டி வந்ததும் அதில் ஏறிக்கொண்டோம்.

காரிருளில் புகைவண்டி ஒவ்வொரு மலைக்குகையிலும் செல்லும்போது, எஞ்சின் விளக்கு குகையின் மீது பட்டு காண்போர் உள்ளத்தில் கற்பனையை எழுப்பியது. அச்சமயத்தில் ஓர் ஓவியனே, கவிஞனே இருந்திருந்தால் அக்காட்சியினை சித்திரமாகவோ, கவியாகவோ செய்திருப்பான். இவ்வாறு இயற்கை எழிலைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும்போது வண்டி பூனு ஸ்டேஷனை அடைந்தது. ஸ்டேஷனிலிருந்து 'டாங்கா'வை அமர்த்திக் கொண்டு, நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலை அடைந்தோம்.

பிறகு பொங்கலுக்கு மறுநாள் நாங்கள் எல்லோரும் சென்னைக்குப் பயணமானேம். இந்த உல்லாசப் பிரயாணம் எங்களுக்கு மிக மகிழ்ச்சியைத் தந்தது. கண்டோர் வியக்கும் குகைக் கோயில்களைக் கட்டி பாரதநாட்டின் சிறப்பக்கலை சிறந்து விளங்கப் பாடுபட்ட நமது முன்னேர்களுக்கு நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேம்.

T. N. கோமதி, IV-B.

கடற்கரைக் காட்சி

கடற்கரையில் எத்தனையோவிதக் காட்சிகள்! கண்ணுக்கடங்காத கடல் ஒரு காட்சி! எண்ணுக்கடங்காத மணல் ஒரு காட்சி! அந்த மணல் வெளியிலே விளையாடுபவர்கள், பேசுபவர்கள், ஆழ்ந்தசிந்தனையில் மூழ்கி யிருப்பவர்கள், இயற்கைக் காட்சியிலே யீடுபட்டு வீற்றிருப்பவர்கள் ஆகிய பல திறத்தினரைக் காணலாம்.

சிறுவர்கள் மாலை வேளையில் கடற்கரையில் கூடி விளையாடுகிறார்கள். பெரியவர்கள், மன அமைதியின் பொருட்டும், ஒருவரோடொருவர் அளவளாவவும் கடற்கரையை நாடுகிருர்கள். பலர் உல்லாசமாக காற்று வாங்கும் நோக்கத்துடன் கடற்கரையில் கூடுகின்றனர். இத்தனை பேர் கூடும் கடற்கரையில், போட்டி போட்டுக் கொண்டு கடலை, பட்டாணி விற்பவர்களுக்கா பஞ்சம்!

அந்தப் பரந்த வெளியிலே சிறுவர்கள் மணலைக் குவித்துக் கோபுரம் கட்டுகின்றனர். சிலர், ஓய்

வின்றி பேரிரைச்சலுடன் ஒன்றன்பின் ஒன்றாக வரும் அலைகளில் கால்களை நனைத்து கடல் நீரின் குளுமையில் திளைத்திருக்கின்றனர். வலைஞர் கட்டு மரங்களைக் கட்டி கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்றனர். மீன் பிடித்துத் திரும்பிவந்த செம்படவர்களைச் சுற்றி சிறு கூட்டம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதைக் காணலாம்.

பொதுவாக நகரங்களில் இயற்கைக் காட்சிகளைக் காண கடற்கரையைத் தவிர வேறு ஒரு சிறந்த இடம் கிடையாது. சிதம்பரனார், பாரதியார் முதலிய பெரியோர்கள், கடற்கரையில் இயற்கை எழிலைக் கண்டு உணர்ச்சிவசப்பட்டு கவிதைகள் இயற்றியுள்ளனர். சிவந்த கிரணங்களை வீசிக்கொண்டு எழும் கதிரவனையும், பால் போன்று ஒளி வீசும் முழு மதியினையும் மக்கள் கண்டு பரவசமடைவதும் கடற்கரையிலேதான்.

நாகரிகத்தில் சிறந்து விளங்கும் சென்னையில் மாலை நேரத்தில் மீன் போல் நீந்திவரும் கார்கள் சாலையின் இருமருங்குகளிலும் நிற்க, அதிலிருந்து வசீகரமான தோற்றத்துடன் இறங்கும் நவநாகரிக மனிதர்கள் கடற்கரையை அடைந்து களிப்புறுகின்றனர்.

ஏழை, பணக்காரர், சிறுவர், பெரியவர் ஆகிய யாவரும் பொதுவாகக் கூடும் சிறந்த இடங்களில் கடற்கரையும் ஒன்று என்பது வெள்ளிடைமலையாகும்.

G. சீதா, IV-C.

நட்பு

“ செயற்கரிய யாவுள நட்பின்
அதுபோல
வினைக்கரிய யாவுள காப்பு,”.

என்ற தமிழ் மறையின்படி மக்களாய்ப் பிறந்தவர்கள் தேடிக்கொள்ள வேண்டிய பொருள் நட்புதானென்று ஒவ்வொருவரும் தத்தம் மனதில் கொள்ளுதல் வேண்டும்.

ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு பழகி நட்புக் கொள்ளாது, ஒருவர் குணத்தைப் பிறர் கூறக் கேட்ட வளவிலே நட்புக் கொண்ட சிறந்த நட்பினரும் நம் நாட்டிலிருந்தார்கள். இத்தகைய நட்பினரே நம் கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும் ஆவர். சோழன் சோழ நாட்டிலே உறையூரிலிருந்தவன். பிசிராந்தையார் பாண்டிய நாட்டில் ‘ பிசிர் ’ என்னும் ஊரில் வாழ்ந்து வந்தவர். இவர்கள் ஒருவரையொருவர் கண்டதில்லை. ஆனால் ஒருவர் குணங்களைப் பற்றி மற்றவர், பிறர் வாயிலாக நன்கு அறிந்திருந்தனர். அவ்வளவிலேயே, காணாது, நண்பர்களாக ஒழுகிவந்தனர்.

ஒரு சமயம் கோப்பெருஞ் சோழனுக்கும், அவன் மக்களுக்கும் பகையுண்டாயிற்று. அக்காரணத்தால் மனம் வருந்திய சோழன் வடக்கிருந்து உயிர் விடத்துணிந்தான். அவ்வாறு சோழன் வடக்கிருந்த போது தன்னருகிலுள்ளோரை நோக்கி, "என் நண்பர் பிசிராந்தையார் இப்போது இங்கு வருவார். அவர்க்கு இடம் ஒருத்து வைப்பீர்" என்றான். அவ்வாறே பிசிராந்தையாரும் சோழன் வடக்கிருத்தலைத் தன் உள்ளுணர்வால் அறிந்து அவ்விடத்திற்குச் சென்று வடக்கிருந்து, தான் கொண்ட கருத்துக்கிசைய சோழனோடு உயிர் நீத்தார். உயிர் நட்பென்பதும், உயர் நட்பென்பதும் இவ்வாறன்றோ இருத்தல் வேண்டும்!

"புணர்ச்சி பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்".

என்ற குறள் இவ்வுண்மையினைச் சுட்டிக் காட்டுகிறதன்றோ?

குசேலர், கண்ணன் இவர்களின் வரலாறும்,

"உடுக்கை யிழந்தவன் கைபோல
அங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

என்ற குறளின் கருத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

பாரி என்ற வள்ளலுக்குக் கபிலர் என்ற புலவரின் நட்புக் கிடைத்தது பெரும் பேறென்றே அவ்வள்ளல் எண்ணியிருந்தான். அவ்வாறே, பாரி இறந்தபின் பாரியின் மகளிரை அவர்களுடைய தாதையைப் போல் பாதுகாத்து, அவர்கட்கு மணஞ் செய்விப்பதற்காகப் பல இன்னல்களை அடைந்து இறுதியில் நல்லிடத்தில் ஒப்படைத்துத் தம்முயிர் துறந்தார்.

துரியோதனனுடைய நண்பனை கர்ணன், பாண்டவர்கள் தன் தம்பியர் என்றறிந்த பின்பும், தன் நண்பன் துரியோதனன் பக்கமேயிருந்து போர் புரிந்து தன் நண்பனுக்காகத் தன் உயிரையே துறந்தான்.

மேலும் உதயணன் பிரச்சோதனனிடம் அகப்பட்டு வருந்தும் போது, அவன் நண்பன் யூகி என்பவன் தன் தந்திரத்தால் பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தையோடு உதயணன் தப்பி வெளியேறும்படிச் செய்தான். இத்தகைய சான்றோர் நட்பே நட்பெனப் படும்

"நவில் தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு,"

என்பது குறள்வெண்பா. ஆதலின், மாசற்ற கோப்பெருஞ் சோழன், கண்ணன், கன்னன், யூகி, கபிலர் போன்ற இவர்களின் நட்பே உண்மையான நட்பாகும்.

S. லக்ஷ்மி, IV-D.

எனது 'கோவா' பிரயாணம்

நாங்கள் ஜனவரி 6ம் தேதி இரவு புறப்பட்டு பூனா செல்லும் மெயிலில் '3 up' என்னும் இரயிலில் ஏறினோம். கோவா போவதற்கு 'லோண்டா' என்னும் இடத்தில் யிறங்கி ஏற வேண்டும். ஆதலால் அங்கு இறங்கி '28 down' என்னும் இரயிலில் ஏறினோம். இது மலைப் பிரதேசமாகையால் இரயில் மலையைச் சுற்றிச் சுற்றிச் சென்றது. இருமருங்கும் மிகவும் ஆழமாக இருந்தது. இரயில் இங்கு போகும் போது எறும்பு ஊருவதுபோல் மிகவும் மெதுவாகப் போயிற்று.

வண்டி கேஸர்க்கை அடைந்ததும் பரிசோதகர்கள் வந்து ஒவ்வொரு வரது சாமான்களையும் சோதனை போட ஆரம்பித்தனர். ஏனெனில் கேஸர்க் வரையுள்ள பகுதி இந்தியச் சர்க்காரைச் சேர்ந்தது. அதற்கு மேல் உள்ள பிரதேசம் போர்ச்சுகீசியரின் அரசாங்கத்திற்கு உட்பட்டது. அங்கு பரிசோதனை முடிந்த பிறகு நாங்கள் கோவாவை அடைந்தோம்.

கோவாமக்களில் பெரும்பாலோர் போர்ச்சுகீசிய மொழியைப் பேசுகின்றனர். நண்டு, நத்தை, மீன் முதலியவைகளை அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். விஸ்கி, பிராந்தி போன்ற பானங்களையும் அதிகமாக அருந்துகிறார்கள்.

அங்கு சாமான்களெல்லாம் மலிவான விலைக்குக் கிடைக்கும். தங்கம், கடிகாரம் போன்ற விலைமதிப்புள்ள பொருள்கள் அங்கு மிகவும் குறைவான விலைக்குக் கிடைக்கும். என்றாலும் அங்கிருந்து பொருள்களை வெளியில் எடுத்துச் செல்ல வேண்டுமானால் 'சுங்கவரி' அதிகமாகக் கட்ட வேண்டும். அதனால் நாங்கள் ஒன்றும் வாங்காமல் அவற்றைக் கண்டு களித்ததோடு திருப்தி யடைந்தோம்.

இங்கு ஒரு நீர் வீழ்ச்சி இருக்கிறது. இந்நீர்வீழ்ச்சி தூய வெண்மையாகவும், காண்போர் கண்ணைக் கவரும்படியாகவும் அமைந்துள்ளது. இதன் வெண்மை நிறத்தை நோக்கியே இதற்கு 'தூத்சாகர்' என்ற பெயரை வைத்தனர் போலும்!

அதற்கடுத்தபடியாக நாங்கள் அங்குள்ள பல கடைகளைக் கண்டு களித்தோம். ஒரு படகில் ஏறிக் கொண்டு அலைமோதும் அகன்ற கடலில் சற்றுத்தூரம் சென்று இன்புற்றோம். அவ்விடத்தை விட்டு அகலமனமின்றி நாங்கள் வீடுதிரும்பினோம்.

இந்தியாவில் உள்ள பல அழகுள்ள இடங்களில் கோவாவும் ஒன்று என்ற முடிவிற்கு வந்தோம். ஒவ்வொருவரும் வாய்ப்புக் கிடைத்தால் அவசியம் போய்ப் பார்க்க வேண்டிய இடம் கோவா என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

E. K. **பர்வதவர்த்தினி**, III-A.

எறிந்த கல் விழும், ஏறிய செருக்கு இறங்கும்

தீபாவளி

முன்னொரு காலத்தில் நரகாசுரன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் பூமாதேவிக்குப் பிறந்தவன். அவன் பெரியவனானவுடன் அசுரர்களுடன் சேர்ந்து பல அக்ரமங்களைச் செய்து வந்தான். இவ்வாறு செய்துவந்தால் தன் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்பதை உணர்ந்து பிரும்மாவைக் குறித்துக் கடுந்தவம் செய்யலுற்ருன். நீண்ட நாட்களுக்குப் பிறகு சதுர்முகன் அவனுக்குக் காட்சியளித்தார். "வேண்டும் வரத்தைக் கேள்," என்று அவர் கூறியதும் நரகாசுரன் உள்ளம் மகிழ்ந்து, "ஐயனே! என் தாயைத் தவிர வேறு ஒருவராலும் நான் சாகாதிருக்க வரமருள வேண்டும்", என்று வேண்டினன். அவ்வாறே வரமளித்து மறைந்தார் பிரும்மா.

நரகாசுரன் அன்றிலிருந்து முனிவர்களைத் துன்புறுத்தியும், யாகங்களைக் கெடுத்தும், பெண்களை இம்சித்தும் வரத்தொடங்கினன். நாளடைவில் தேவர்களும் அவனைக் கண்டு அஞ்சுவராயினர். ஒரு நாள் தேவர்களையும் தேவேந்திரனையும் சண்டைக்கு அழைத்து அவனது கிரீடத்தையும் அபகரித்தான். அப்பொழுது தேவேந்திரனின் குருவாகிய பிரகஸ்பதி நரகாசுரன் வரப்பிரஸாதம் பெற்றதைத் தெரிவித்து அவனைக் கொல்ல சத்யபாமாவினுல் தான் முடியுமென்றும், சத்யபாமை முன் ஜென்மத்தில் நரகாசுரனின் தாயாகிய பூமாதேவி என்றும், அவனைக் கொல்ல அவளது உதவியை நாடும்படியும் எடுத்துக் கூறினர்.

உடனே தேவேந்திரனும் துவாரகைக்குச் சென்று கண்ணனை பாமாவுடன் வந்து நரகாசுரனை வதைக்கும்படி வேண்டினன். அவ்வாறே கிருஷ்ணனும் பாமாவுடன் வந்து போர் புரிந்தார். வரத்திற்கேற்ப நரகாசுரனும் தன் தாயாகிய பாமாவினலே மாண்டான். அவன் இறக்கும்பொழுது கிருஷ்ணபரமாத்மாவிடம் தான் இறந்த தினத்தை, பூலோகத்திலுள்ள மக்களனைவரும் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அத்தினத்தைத்தான் நாம் தீபாவளியாகக் கொண்டாடுகிறேம்.

R. சசிரேகா, III-B



C. V. Sathiavathi, VI-C.

சிறந்த கானம்

சிவனின் முரசிலிருந்து சங்கீதம் பிறந்தது. அதை உலகமெங்கும் பரப்ப நிச்சயித்தார் ஈசுவரன். கல்விக்குக் கலைவாணி அதிதேவதையாக இருப்பதைப்போல் இசைக்கு அதிபதி ஏற்படுத்த எண்ணினார். அதற்கேற்ப தும்புரரையும் நாரதரையும் அழைத்து அவர்களுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுத்தார்.

தும்புரர் தேவலோகத்திலும் நாரதர் பூலோகத்திலும் சஞ்சாரம் செய்து சங்கீதத்தைப் பரப்ப ஆரம்பித்தனர். இதற்கிடையில் யார் பாடுவதில் சிறந்தவர் என்ற போட்டி ஏற்பட்டது. கலைவாணியிடம் சென்று கேட்டனர். அவர்களின் இன்னிசையைக் கேட்ட அவள் ஒன்றும் சொல்ல மாட்டாமல், "இருவரும் நல்ல பாடகர்கள்தான்" என்றாள். பிறகு அவர்கள் ஈசுவரனிடம் சென்று கேட்டனர். அவரும் முடிவாக ஒன்றும் கூறமாட்டாமல் "நீவிர் இருவருமே இசையில் வல்லுனர்கள்," என விடையிறுத்தார். இதனாலும் அவர்கள் திருப்தியடையாமல் உமையிடம் சென்று முறையிட்டனர்.

இவர்களின் இன்னிசையைக் கேட்டு உளமகிழ்ந்த உமை, "நீங்கள் ஒருவரை யொருவர் விஞ்சக் கூடிய திறமை உடையவர்கள். உங்களில் யார் மிகத்திறமை உடையவர் என்று அறுதியிட்டுக் கூற என்னால் இயலாது. உங்களுக்கு அவ்வாறு தெரிந்து கொள்ள வேண்டுமாயின் சங்கீதத்தில் மேதையான ஆஞ்சனேயரிடம் சென்று அறிந்து கொள்ளுங்கள். அவர் விந்திய மலையில் உள்ளார்" என்று பகர்ந்தாள்.

உடனே அவ்விருவரும் அங்குச் சென்று தவம் செய்து கொண்டிருந்த அனுமாரை எழுப்பி, தங்கள் ஐயத்தை அகற்றுமாறு வேண்டினர். அனுமார் புன்னகையுடன், "இதற்காகவா இவ்வளவு தூரம் வந்தீர்கள்! நல்லது. உங்கள் வீணைகளை என்னிடம் கொடுங்கள்," என்று கேட்டு வாங்கினார். கானத்தைக் கேட்டுத் தீர்ப்புச் சொல்லப் போகிறார்கள் என்று இருவரும் எண்ணினர். ஆனால் அதற்கு மாறாக ஆஞ்சனேயரே பாட ஆரம்பித்தார். அவர் பாடப்பாட மலை சிறிது சிறிதாக உருகி நீராகி கால்வாயாகப் பெருக ஆரம்பித்தது. அச் சமயம் அவர் வீணைகளிரண்டையும் அக்கால்வாயில் வீசி எறிந்தார்.

இவற்றைப் பார்த்து தும்புரரும் நாரதரும் வியப்படைந்தனர். பிறகு சிறிது நேரத்தில் அக்கால்வாய் உறைந்து விட்டது. அதில் ஆஞ்சனேயர் எறிந்த வீணைகள் அகப்பட்டுக் கொண்டன. அச் சமயம் ஆஞ்சனேயர் அவர்களை நோக்கி, "உங்கள் சங்கீதத்தின் திறமையைக் காட்டிப் பாறையைக் கரையவைத்து வீணைகளை எடுத்துக் கொள்ளுங்கள்," என்றார். அவர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

எதை நினைக்கிறாயோ அதுவேயாகிறாய்

இவர்கள் திகைப்பைக் கண்ணுற்ற அனுமார், நகைத்து மீண்டுமொருமுறை உறைந்த பாறையைக் கரையவைத்து வீணைகளை எடுத்துக் கொடுத்தார். "நீங்கள் இருவரும் சம திறமையுள்ளவர்கள். வீணைப் போட்டியிடாது இறைவனின் கட்டளையை நிறைவேற்றப் பாடு படுங்கள்," என்று அறிவுரை கூறி அனுப்பினர்.

M. C. உமா, III-C.

ரோஜா

இறைவனது படைப்பில் அழகுக்கு அழகு செய்வது மலர்களே என்று கூறலாம். சிறிய, பெரிய எல்லாக் காரியங்களுக்கும் மலர்களே மணத்தையும், கவர்ச்சியையும் தருகின்றன. மலர்களிலே சில, அழகைப் பெற்றிருந்தால் மணம் இரா. அங்ஙனம் மணத்தைப் பெற்றிருந்தாலோ கவர்ச்சி இருப்பதில்லை. அழகும், மணமும் ஒருங்கே பொருந்தி யிருப்பது விந்தையே! இவ்விரு குணங்களையும் ஒரு சேரப் பெற்ற மலர்களும் உண்டு. அவைகளில் சிறந்தது ரோஜா மலரே யாம்.

எழிலும், சுகந்தமும் கூடியுள்ள இம்மலர்ச் செடிகளில் பல சிறிய, கூரிய முட்கள், அவைகளின் தற்காப்பிற்காக இறைவனல் படைக்கப் பட்டிருக்கின்றன. ரோஜாக்களிலே வெள்ளை, மஞ்சள், சிவப்பு போன்ற பல்வேறு வகைகளும் உள்ளன. இவற்றில் காட்டு ரோஜாக்கள் என்பன பார்வைக்கு மிகப் பெரியனவாக இருக்கும். ஆனல் அவைகளுக்கு நாட்டு ரோஜாக்களைப் போன்ற மணம் இருப்பதில்லை.

மற்ற மலர்களைப் போலல்லாமல், ரோஜா மலர் பல்வேறு விதங்களில் பலருக்குப் பயன் படுகிறது. பெண்டிரின் சடைகளை அலங்கரிப்பது அழகு பொருந்திய ரோஜா மலர். இறைவனது திருவடிமலரை அணிசெய்வதும் ரோஜா மலரே. உயர்ந்த மணம் பொருந்திய அத்தர் எடுப்பதும் ரோஜா மலரிலிருந்தே. பெரியார்களை வரவேற்கும் பொழுதும், திருமணத்தின் பொழுது பெரும்பாலும் பயன் படுத்துவதும் வசீகரமுள்ள ரோஜாவால் கட்டிய மாலைகளே. வண்டினங்கள் பெரிதும் நாடுவதும் ரோஜாமலரையே யாம்.

இவ்வண்ணமாக மலர்களிலே ரோஜா மலர் பொலிவுற்று திகழ்தல், நாமும் உள்ளும், புறமும் மணம் பெற்று விளங்கவேண்டு மென்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

C. R. சந்திரா, III-D.

மறைந்த குற்றம் மனதிற் குடையும்

மஹிடாசுர மர்த்தினி

முன்னொரு காலத்தில் மஹிடாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களைக் குறித்துத் தவம் செய்து வரம் பெற்று மனிதர்களையும், தேவர்களையும் கஷ்டப்படுத்தினான். அதைக் கண்டு தேவர்கள் மும்மூர்த்திகளிடம் சென்று முறையிட்டார்கள். அவர்கள், "நாங்கள் அவனுக்கு வரம் கொடுத்து விட்டோம். எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் காளிதேவியிடம் முறையிடுங்கள்," என்றார்கள். பிறகு தேவர்கள் நாரதரிடம் சென்று நடந்ததைக் கூறினர்.

நாரதர் ஓர் உபாயம் செய்தார். அவர் மிகவும் தந்திரமாக மஹிடாசுரனிடம் சென்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி, "அதோ! அங்கே ஒரு குன்று தெரிகிறதே, அதற்குப் பக்கத்தில் ஒரு பெண் இருக்கிறாள். அவள் மிகவும் அழகு வாய்ந்தவள். அவள் உனக்கு ஏற்றவள்," என்றார்.

உடனே அந்த அரக்கன் அங்குச் சென்றான். அங்கு உண்மையாகவே ஒரு பெண் இருந்தாள். அவளைப் பார்த்து மஹிடாசுரன் தன்னை மணம் செய்து கொள்ளுமாறு வேண்டினான். அதற்கு அவள் இசையவில்லை. உடனே அவன் கோபம் பொங்க அவளோடு சண்டையிடத் தொடங்கினான். தேவியும் அசுரனுடன் போரிட்டாள். அவளே காளிதேவியாவாள். அழகிய பெண் உருவம் கொண்டு அங்கு அரக்கனைக் கொல்லுவதற்காகவே வந்திருந்தாள்.

இருவருக்கும் பத்து நாட்கள் பயங்கரமான போர் நடந்தது. கடைசியில் பத்தாவது நாள் பெண் உருவத்திலிருந்த காளி அரக்கனைக் கொன்று வெற்றி பெற்றாள். அந்நன்னாள் தசமியாதலின் விஜயதசமி என்று அந் நாளைக் கொண்டாடுகிறோம்.

அன்று எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் வெற்றிகரமாகவே முடியும். அதனால் தான் அன்று குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கிறோம். புதிய காரியங்களையும் தொடங்குகிறோம். அத்தேவியைத்தான் மஹிடாசுர மர்த்தினி என்று கூறுகிறோம்.

G. நிர்மலா, II-A.



N. Padma, I-C.

தேங்காய்

நான் என் தாயாரிடம் இருக்கும் பொழுது எவ்வளவு சந்தோஷமாக இருந்தேன்! என்னுடைய சகோதரிகளுடன் எவ்வளவு உல்லாசமாகக் காற்றில் முன்னும் பின்னும் அசைந்தாடிக் கொண்டிருந்தேன்! ஆனால் —, இன்று —

என் தாய், "தலையை வெளியே காட்டாதே; நன்றாக இருக்கிறாய் என்று கர்வப் படாதே," என்று கூறுவாள். நான் என் தாயினுடைய புத்திமதிகளைக் கேட்கவில்லை. அதனால் என்ன ஏற்பட்டது தெரியுமா? மறுநாள் என் எஜமானர் வந்து அண்ணாந்து எங்களைப் பார்த்தார். நான் சந்தோஷத்துடன் அவரைப் பார்த்தேன். அவர் என்னையும் என் சகோதரிகளையும் பறித்துக் கொண்டு போனார். என்னை என் தாயாரிடமிருந்து பிரித்து விட்டார். எனக்கு வருத்தமாக இருந்தது.

நாங்கள் வெகு நாட்கள் எங்கள் எஜமானரிடம் இருக்கவில்லை. கடையில் இருந்த பொழுது நாங்கள் தாயை நினைத்து வருந்தினோம். அதற்குள் ஒருவர் வந்து என்னை எடுத்துத் தட்டிப் பார்த்து குலுக்கினார். என் எஜமானர் அவரிடம் "எட்டு அணா" என்று கூறி விற்றுவிட்டார். எனக்கு எப்படி இருக்கும் சொல்லுங்கள்? தாயைப் பிரிந்ததுமல்லாமல் எஜமானரையும், விட்டுப் பிரிய வேண்டுமென்றால்? நான் இவ்வாறு நினைத்து வருந்தும் போதே அவர் தன் பையில் என்னைப் போட்டுக் கொண்டு போய் விட்டார்.

அவர் மனைவி என்னை மகிழ்ச்சியுடன் இப்படியும் அப்படியும் ஆட்டிவிட்டு உடைத்தாள். அதோடு விடவில்லை. என்னை அம்மியில் வைத்து அரைத்து, தண்ணீரோடு கலந்து குழம்பில் விட்டு விட்டாள். என் கதி இப்படி ஆகி விட்டது. தாய் சொல்லை மீறியதற்குத் தக்க தண்டனையல்லவா இது?

S. V. லலிதா, II-B.

கடல்

நாம் வசிக்கும் உலகம் கடலால் சூழப்பட்டது. அதனால் புலவர்கள் கடலை ஆடையாகக்கொண்ட நிலமடந்தை என்று பூமாதேவியை வருணித்துள்ளனர். நீர்ப்பகுதி, நிலப்பகுதியைவிடப்பெரிது. இதன் எல்லை பரந்து கிடக்கின்றது. கடல் சில இடங்களில் மிக ஆழமாகவும் மற்றும் சில இடங்களில் ஆழம் குறைந்தும் இருக்கும். இது உலகில் தோன்றும் சிறிய பெரிய ஆறுகளுக்கெல்லாம் அடைக்கலமாக இருக்கின்றது.

கடல் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு பெயருடன் விளங்குகிறது. இந்து மகாசமுத்திரம், பஸிபிக் சமுத்திரம், கருங்கடல் முதலியன இவற்றிற்கு உதாரணங்களாகும்.

சிறு மீன் முதல் கப்பலைக்கவிழ்க்கும் திமிங்கிலம் ஈருக கிடலில் வாழ்கின்றன. கடலில் விளையும் பொருள்கள் கணக்கில் அடங்கா. பல அரிய விலை மதிப்புள்ள முத்து, பவழம் போன்றவைகள் கடலில்தான் தோன்றுகின்றன. இவையல்லாமல் பல அற்புதமான பொருள்களுக்கும் கடலே இருப்பிடமாக அமைந்துள்ளது.

அயல் நாட்டு வாணிபத்திற்கு ஏற்ற மார்க்கமாக அமைந்துள்ளது கடல்தான். அதனாலன்றோ ஒளவையாரும் 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று கூறியுள்ளார்.

S. ஜெயகுமாரி, II-C.

பானை

நான் யார் தெரியுமா? படித்துப் பாருங்கள்! முதன் முதலில் நான் குயவன் வீட்டுக் கொல்லையில் களி மண்ணாகக் கிடந்தேன். குயவன் என்னைப் பார்த்துவிட்டு மிக மகிழ்ச்சியோடு உள்ளே தூக்கிச் சென்றான். அவனது மகிழ்ச்சிக்குக் காரணமறியாத நானும் மிகவும் குதூகல மடைந்தேன். வீட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும் என்னை வந்து பார்த்து, என்னைச் சுற்றி விளையாடினர். அவர்கள் செய்கையைக் கண்டு நான் வியப்புற்றேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் என்னைக் காலால் நன்ருக மிதித்தான். எனக்கு உடம்பு மிக மிக வலித்தது. "நரிக்குக் கொண்டாட்டம், நண்டுக்குத் திண்டாட்டம்" என்ற பழமொழி என் நினைவிற்கு வந்தது. அவன் என்னைத் துன்புறுத்துவதற்காகவே கொண்டுவந்தான் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். ஆனால் நான் என்ன செய்ய முடியும்! விதியை நினைத்துக் கண்ணீர் வடித்தேன்.

திடீரென்று குயவன் என்மீது குளிர்ச்சியான தண்ணீரை ஊற்றி ஊறவைத்தான். குளிர்ச்சியான நீர் என்மீது பட்டதும் வலி கொஞ்சம் தணிந்தது. நானும் சற்றுச் சந்தோஷத்தை அடைந்தேன். ஆனால் இரண்டு நாட்கள்தான் என் சந்தோஷம் நிலைத்தது. மீண்டும் நான் துன்பத்திற்குள்ளானேன். இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது உலகவியற்கை என்ற உண்மையை உணர்ந்தேன்.

என்னைக் குயவன் நன்ருக மிதித்து ஒரு சக்கரத்தில் வைத்துச் சுற்றினான். எனக்கு, தட்டாமாலை சுற்றுவது போல தலை 'கிர்'

என்று சுழன்றது. நான் அதையும் பொறுத்துக் கொண்டேன். இன்னும் பலவிதமாக என்னைத் துன்புறுத்தி, கடைசியில் பானை வடிவமாகச் செய்தான். அப்பப்பா! அந்த நாட்களில் நான் பட்ட வேதனையைக் கூறவும் முடியுமோ! பிறகு அவன் என்னை நிழலில் உலர்த்தியது எனக்கு மன ஆறுதலை அளித்தது. ஆனால் இந்த ஆறுதலும் நிலைக்கவில்லை. ஏனெனில் என்னைச் சூளையில் கொண்டுபோய் அடுக்கினான்.

அங்கே என் நண்பர்கள் பலரும் இருந்தார்கள். எங்களுக்குக் குயவன் தீ மூட்டினான். தீயில் வெந்து கொண்டிருந்த அந்த நாள், நாங்கள் பட்ட கஷ்டத்தைச் சொல்லி முடியாது. இரண்டு நாட்களுக்குப் பிறகு தான் வெளி உலகுக்கு வந்தோம். அங்கே என் நண்பர்கள் சிலர் தூள் தூளாக இறந்து கிடந்ததைக் கண்டு வருந்தினேன். இம்மட்டோடு நான் தப்பிப் பிழைத்ததற்கு இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

அங்கிருந்து எங்களைக் கடைக்கு எடுத்துச் சென்றான். போவோர் வருவோர்க்கு நாங்கள் அழகாகக் காட்சியளித்தோம். நான் கடைக்கு வந்தவர்களை ஆவலுடன் எட்டிப் பார்த்தேன். என் அழகைக் கண்டு மயங்கிய ஒரு பெண் என்னை விலைபேசி வாங்கினாள். அவளது இடுப்பில் ஏறிக்கொண்டு ஒய்யாரமாகத் தெருவழியே சென்றேன். பிறகு அவள் வீட்டுத் தண்ணீர்ப் பானையாக மாறினேன். அநேக நாட்கள் அவர்களுடன் இருந்ததால் நன்றாகப் பழகிவிட்டேன். ஒரு நாள் தண்ணீர் எடுக்கும் போது நான் உடைந்து விட்டேன். சற்றும் இரக்கமின்றி என்னை வெளியே எறிந்து விட்டனர். அண்டை வீட்டுச் சிறுமிகள் என்னைப் பாண்டியாட எடுத்துக் கொண்டு தூள் தூளாய் உடைத்துக் குப்பைத் தொட்டியில் போட்டனர். நான் தற்சமயம் எதற்கும் உபயோகமில்லாமல் இருக்கிறேன். கேட்டீர்களா என் கதையை?

K. S. ஹேமாவதி, II-D.

முடவனும் கொம்புத்தேனும்

ஓர் ஊரில் முடவன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சுற்றத்தார் ஒருவரும் இல்லை. பிச்சை யெடுப்பதே அவனுடைய தொழில். எனினும் தனக்குக் கிட்டாத பொருள்களின்மேல் ஆசை கொள்வான். அது பேராசை என்றும், பேராசை கொள்வது தகாது என்றும் அவன் நினைக்கவில்லை. அவன் பிச்சையெடுக்கச் செல்லும் வழியில் ஒரு பெரிய மரம் இருந்தது. அங்கு தேன்கூடு ஒன்று இருந்தது. அவன் அதிலுள்ள தேனைச் சாப்பிட விரும்பினான். அது அவனால்

எப்படி முடியும்? அவன் முடவன். இருந்தாலும் என்றைக்காவது ஒரு நாள் அதைப் பெறவேண்டுமென்று நினைத்தான்.

ஒரு நாள் காலை வேளையில் அவ் வழியாக ஊருக்குள் செல்ல வந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் தாமாகவே தேன் கூட்டைப் பார்த்தன. தேன் கூடு இருந்த கிளையானது சிறிது கீழே சாய்ந்திருப்பது போல் அவனுக்குப் பட்டது. அவனுடைய ஆசையும் அதிகரித்தது. அம்மரத்தின் அருகே சென்று அக்கிளை தனக்கு எட்டுமா என்று முயற்சி செய்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் சிலர் கைகொட்டிச் சிரித்தனர். "முடவனுக்குக் கொம்புத்தேன் வேண்டுமாம்," என்று கூறிப் பரிகாசம் செய்தனர்.

முடவனுக்குக் கோபம் ஏற்பட்டது. அச் சிறுவர்கள்மேல் ஒரு கல்லை எடுத்து எறிந்தான். இதைக் கண்ட சிறுவர்கள் முடவனுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று நினைத்தனர். ஆகையினால் அவர்களில் பெரியவன் ஒருவன் ஒரு கல்லை எடுத்து தேன் கூட்டை நோக்கி எறிந்தான். பிறகு சிறுவர்கள் ஓடிவிட்டார்கள்.

உடனே தேன்கூட்டில் இருந்த ஈக்கள் எல்லாம் அக்கிளையின் கீழ் நின்றுகொண்டிருந்த முடவன் தான் கல்லை எறிந்தான் என்று நினைத்து அவனைக் கொட்ட ஆரம்பித்தன. முடவன் வலி பொறுக்க மாட்டாமல் தவித்து அவ்விடத்தை விட்டு நீங்கினான். அப்பொழுது தான் அவனுக்குத்தான் எட்டாத பொருளுக்கு ஆசைப்பட்டது தவறு என்பது தெரிந்தது. எட்டாத கொம்புத்தேனுக்கு ஆசைப் பட்டதனாலல்லவா தேனீக்களும் அவனைக் கொட்டின. சிறுவர்களும் பரிகாசம் செய்தனர்! இதிலிருந்து நாம் பேராசை கொள்ளலாகாது என்று அறிகிறோமல்லவா?

N. V. சியாமளா, I-A.

முயற்சி

நாம் ஒரு வேலையைச் செய்ய முற்படுவதே முயற்சியாகும். அவ்வேலை சாதாரண வேலையாக இருந்தாலும், கடினமான வேலையாக இருந்தாலும் அதனைச் செய்து முடிப்பது தான் சிறப்பு. நம் நாட்டில் காந்திஜி, நேரு, படேல் போன்ற பெரியோர்கள் விடாமுயற்சியுடன் உழைத்ததனால் நாம் சுதந்திரம் பெற்றோம் என்பதை யாவரும் அறிவர். அதே போல் நாமும் சிறு வயதிலிருந்தே முயற்சியுடன் உழைப்போமாகில் எல்லாக் காரியங்களிலும் வெற்றி யடையலாம். "முயற்சி யுடையோர் இகழ்ச்சி யடையார்" அன்றோ?

தற்சமயம் நம் நாட்டில் சிலரே முயற்சியுடன் வேலை செய்கின்றனர். உலகில் பல அற்புதமான பொருள்கள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டதற்கு மக்களின் முயற்சியே காரணமாகும். இதனாலன்றோ இன்று ஆகாய விமானம், டெலிபோன், வானொலிக் கருவி போன்ற வியக்கத் தக்க பொருள்கள் தோன்றியுள்ளன.

மக்களை உயர்நிலையில் வைப்பது முயற்சியோடு கூடிய உழைப்பேயாகும். 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை மனதில் கொண்டு உழைப்பதுதான் அறிவுடைமையாகும்.

T. R. காயத்ரி, I-B.

உடற் பயிற்சி

உடல் சுறு சுறுப்பாகவும், நோயில்லாமலும் இருத்தற் பொருட்டு பயிற்சி செய்வது உடற் பயிற்சியாகும். இது சிறுவர், இளைஞர், முதியவர் ஆகிய அனைவருக்கும் மிக அவசியமாகும். ஆனால் இஃது அவரவர் வயதிற்கும், உடல் நிலைக்கும் ஏற்றவாறு அமையவேண்டும். இதை மாணவ மாணவியர் அவசியம் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்கள் அதிக நேரம் ஒரே இடத்திலிருந்து கல்வி கற்பதனால் அவர்கள் மூளை பயிற்சி பெறுகிறதேயன்றி உடலின் மற்ற உறுப்புக்கள் பயிற்சி பெறுவதில்லை. அதனால் சிறுவர் உடல் வன்மை குறைந்து நோய்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே பள்ளிகளில் பல விளையாட்டுக்களை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

வீட்டில், பெண்டிர் தண்ணீர் இறைத்தல், மாவரைத்தல், அரிசி குத்துதல், துணி துவைத்தல் முதலிய வீட்டு வேலைகளின் மூலமாக உடலை உரம்பெறச் செய்யலாம்.

முதியோர்களும் உடல் நலத்திற்காகவே காலை மாலை நேரங்களில் உலாவச் செல்கின்றனர். ஆகையினால் உடற்பயிற்சியை ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

M. V. ராஜம், I-C.

G. Saraswathi, VI-A.

மயிலாப்பூர்

என் இருப்பிடம் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய பட்டணமாகிய சென்னையிலே உள்ளது. எனக்கு முதலில் மக்கள் 'மயில் ஆர்ப்பூர்' என்று பெயரிட்டனர். ஏனெனில் முன்னர் மயில்கள் என் சோலைகளில் ஆரவாரம் செய்து கொண்டிருந்தனவாம். அதனால் மயில் ஆர்ப்பூர் என்று பெயரிட்டனர். அது நாளடைவில் குறுகி 'மயிலாப்பூர்' என ஆகியது.

என் இடத்தில் நான் இருமுக்கிய ஆலயங்களைக் கொண்டுள்ளேன். ஒன்று கபாலீசுவரர் கோயில். மற்றொன்று திருக்குறள் இயற்றிய தெய்வப் புலவர் திருவள்ளுவனார் கோயில். கபாலி கோயிலைச் சுற்றி நான்கு புறங்களிலும் அகன்ற மாட வீதிகளும், கோயிலுக்கு எதிரே அழகிய தாமரைக்குளமும் அமைந்திருப்பது எனக்கு அழகைக் கொடுக்கின்றது. உலகப் புகழ் பெற்ற வள்ளுவனாரும் என்னிடமேதான் தோன்றினார் என்பதை நினைக்கும் பொழுது, எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் உண்டாகிறது.

சென்னையிலேயே நான்தான் மிகச் சிறப்பு வாய்ந்தவள் என்று எல்லோரும் கூறுகின்றனர். இதைக்கேட்க என் மனம் சந்தோஷமடைகின்றது.

M. C. நளினி, I-D.

ஆசிரியர் சங்கம்: 1952-'53

பள்ளியின் முன்னேற்றத்திற்குத் தொண்டாற்றும் நான்கு சங்கங்களுள் முதன்மை ஸ்தானம் வகிப்பது ஆசிரியர் சங்கமாகும். இதன் சீரிய நோக்கங்கள் பல. போதனை முறையில் சீர்திருத்தங்களைச் செய்வது, அதில் ஏற்படும் சிக்கல்களை அகற்ற வழி தேடுவது, பொதுவாக மாணவர்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்குவதற்குரிய வழிகளைச் சிந்திப்பதுபோன்ற பல விஷயங்களைக் கூட்டங்கள் கூடி ஆலோசிப்பது இச்சங்கத்தின் முக்கிய அலுவலாகும். இச்சங்கம் இதற்கென மாதமொரு முறை இறுதிச் சனிக்கிழமையன்று முற்பகல் கூடி, சிற்றுண்டிக்குப்பின் இனிது கலைவது வழக்கம்.

ஆசிரியர் சங்கத்தின் முதல் அலுவல் கூட்டத்தை இவ்வாண்டு ஜூன் மாதம் 28-ம் தேதியன்று பள்ளித் தலைவியின் தலைமையில் Mrs. O. C. Srinivasan, M.A., L.T., Deputy Director of Public Instruction, அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அவ்வமயம் எம் பள்ளிக்கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ K. ரங்கசுவாமி ஐயங்கார் அவர்களும் மற்றும் பள்ளி அன்பர்களும் வந்திருந்து கூட்டத்தைச்

Club Drill.



Teachers playing Ball and Circle Relay.

Mothers and Old Girls playing Musical Chair.

Teachers' Union : Drama : Karna : 29-3-'52.



Girls' Union : Drama : Savithri : 23-8-'52.

சிறப்பித்தனர். Mrs. O. C. Srinivasan அவர்கள் தமது ஆரம்ப உரையில், “இப் பாடசாலை மனப்பூர்வமாக உழைப்பவர்களால் முறைப்படி நடத்தப்படுகின்றது. மாணவியரை சமூகவளர்ச்சிக்கேற்ற பல நற்பண்புகள் உடையவராக உருவாக்க இப் பாடசாலை அவர்களுக்குப் பல சந்தர்ப்பங்களை அளிக்கின்றது. ஒரு மனத்தோடு ஒத்துழைத்து முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதில் ஒப்பற்று விளங்குகிறது இப் பாடசாலை” என்று சிறப்பித்தது, குறிப்பிடத்தக்கது.

இச் சங்கம் இவ்வாண்டு ஆறு முறை கூடிற்று. ஒவ்வொரு கூட்டத்திலும் முறையே சமூக நூல், கணிதம், சம்ஸ்கிருதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் மாதிரி வகுப்புக்கள் நடைபெற்றன. ‘படவிளக்கின் மூலம் கல்வி,’ ‘பள்ளியில் ஒலிபெருக்கி,’ ‘சமூக வாழ்க்கைக்குப் பள்ளி வாழ்க்கையே முக்கிய சாதனம்’ என்ற தலைப்புக்களில் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. அவற்றோடு ‘நடுநிலைப்பள்ளி வகுப்பு ஆங்கிலப் பாடத்திட்டம், உயர்நிலைப் பள்ளி வகுப்பு ஆங்கிலப் பாடத்திட்டம்’ என்பவைபற்றி நிகழ்ந்த ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆசிரியர் அனைவருக்கும் பயனளிப்பதாய் அமைந்தன. இச்சங்கம் இறுதியாகக் கூடியபொழுது சென்னையில் நடந்த ‘ஆறுவது அகில உலக சமூக சேவை மகாநாட்டில்’ கலந்துகொள்ளும் பேறு பெற்ற எம் தலைவியும் மூன்று ஆசிரியைகளும் அங்கு நிகழ்ந்த பல அரிய விஷயங்களைப்பற்றி எடுத்துரைத்தனர்.

பல வேலைகளுக்கிடையே உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் சந்தர்ப்பங்களையும் அவர்கள் கைவிடவில்லை. சங்கத்தின் மூன்றாவது கூட்டத்தன்று பிற்பகல் ஆசிரியர் அனைவரும் அமிஞ்சிக்கரைச் செங்கற் சூளையைப் பார்க்கச் சென்றனர். பாடசாலைக் காலண்டரில் குறிப்பிட்ட உல்லாசப் பிரயாணத் தேதியை எதிர்பார்த்திருந்த ஆசிரியைகள் நவராத்திரி விடுமுறை வந்ததும் திருக்காட்டுப் பள்ளிக்குப் போகத் திட்டமிட்டனர். தலைவியுட்பட இருபத்திரண்டுபேர் குறிப்பிட்ட நாளில் புறப்பட்டுச் சென்று, பல இடங்களைச் சுற்றிப்பார்த்துக் களிப்புடன் திரும்பினர்.

வழக்கம்போல் இவ்வருடம் ‘கர்ணன்’ என்னும் நாடகத்தை Mrs. பாரிஜாதம் நாயுடு அவர்கள் தலைமையில் மிக வெற்றிகரமாக நடத்தி, ஆசிரியர் எல்லாத் துறையிலும் வல்லவர் என்பதை நிரூபித்தார்கள். இதன் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை சங்கத்தின் க்ஷேம நிதியில் சேர்க்கப்பட்டது.

பாடசாலை நிர்வாகிகளும், தலைவியும் ஆசிரியைகளாகிய எங்களுக்குக் காட்டும் அன்புக்குத் தகுந்த பாத்திரர்களாய் எம்மை ஆக்கிக்கொள்ள முயலுவதைத் தவிர வார்த்தைக

ளால் நன்றி செலுத்துவது பொருந்தாது. நாங்கள் எல்லோரும் ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவர்கள் குடும்பத் தலைவர்கள் என்பதும் தீபாவளி விருந்தில் கலந்துகொள்பவரே அறிவர். இம்முறையும் மிகச் சிறப்பாக அமைந்த விருந்திற்குப் பின், பாடசாலைக் கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ K. ரங்கசுவாமி ஐயங்காரும், காரியக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ S. வரதாச்சாரியாரும் பரிசுகளை அன்போடும், ஆசியோடும் வழங்க, அவற்றைக் கிடைத்தற்கரிய பெரும் பேறெனக் கருதிப்பெற்றுப் பூரிப் பெய்தினோம். தலைவி, வருடாந்திரப் புது விருந்தை ஜனவரி 25-ம் தேதியன்று ஆசிரியர்களுக்கும் பாடசாலைச் சிப்பந்திகளுக்கும் அளித்து மகிழ்வித்தனர். அவ்வமயம், பாடசாலைப் பரிசோதனையாளர் ஸ்ரீமதி சரஸ்வதி துரைசுவாமி அவர்களும், ஜில்லா கல்வியதிகாரியும், பாடசாலைக் கூட்டுக் காரியதரிசியும், மற்றும் அன்பர்கள் பலரும் விருந்தில் கலந்து எங்களைக் கௌரவித்தனர்.

இவ் ஆண்டு Sri K. சுமுகி, Sri P. S. கல்யாணி ஆகிய இருவர் திருமணத்திற்கும் ஆசிரியைகளுடன் தலைவி சென்று, ஒவ்வொருவருக்கும் அன்பளிப்பாக ஒரு வெள்ளிக் கிண்ணமும் பட்டு இரவிக்கையும் அளித்து ஆசீர்வதித்தனர்.

மாணவியர் முன்னேற்றத்திற்காகத் திரை மறைவில் பணியாற்றும் ஆசிரியர்களை வெளி யுலகத்திற்கு அறிமுகப்படுத்தி, அவர் செய்யும் சிறு தொண்டைப் பெரிதென மதித்துப் பெருமை கொள்ளும் எம் தலைவிக்கும் பாடசாலைக் கூட்டுக் காரியதரிசி, குருகுல தர்மாச்சாரிய K. ரங்கசுவாமி ஐயங்கார் அவர்களுக்கும் ஆசிரியைகளாகிய நாங்கள் என்றென்றும் கடமைப் பட்டுள்ளோம்.

K. சுமுகி, B.Sc., B.T.,
A. விஜயலக்ஷ்மி,
காரியதரிசிகள்.

மாணவியர் சங்கம்

பாடசாலைக் காலண்டரில் குறிப்பிட்டபடி எங்கள் சங்க அலுவல்கள் யாவற்றையும் வெற்றிகரமாக முடித்து விட்டோம் என்னும் பெருமிதத்துடன் பல நிகழ்ச்சிகளடங்கிய இவ் ஆண்டைக் கடக்கப் போகின்றோம்.

நிம்மதியான இரண்டு மாதகால கோடை விடுமுறைக்குப்பின் புதிய ஊக்கமும், உற்சாகமும் பொங்க பாடசாலைக்குத் திரும்பினோம். ஜூன் மாதம் 18-ந் தேதியன்று எங்கள் சங்க அலுவலாளர்களைத் தேர்ந்தெடுத்தோம். 19-ந் தேதியன்று

சேவா சங்கம் தன் வேலையைத் தொடங்கிற்று. ஜூன் 23-ந் தேதி எங்கள் சங்க ஆரம்பவிழாவன்று இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி பரமாத்மானந்தர் நிகழ்த்திய உருக்கமான சொற்பொழிவு, நாங்கள் மேற்கொண்ட வேலைகளுக்கு உற்சாகம் ஊட்டக்கூடியதாக அமைந்திருந்தது.

இச்சங்கத்தின் கீழ் அடங்கியுள்ள பல பிரிவுகளும் தம் வேலைகளைத் திறம்படச் செய்தன. எங்களில் 436 பேர் அவரவர் மனதிற்குகந்த பலபிரிவுகளில் சேர்ந்தோம். பாடசாலையில் பிறருக்குத் தொண்டு புரியும் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள விரும்பிய 265 சிறுமியர் சேவாசங்கத்தின் அங்கத்தினரானோம். ஒழுங்கு முறையைக் கையாளுவதிலும், பல விசேஷக் கொண்டாட்டங்களின்போதும் ஆசிரியைகளுக்கு உதவிபுரிவதில் பேருவகை கொண்டோம்.

'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்னும் பழமொழிக்கேற்ப எங்களில் அநேகர் கலை அபிவிருத்திச் சங்கம், சங்கீதக்கூட்டம், ஸ்தோத்திர பாட வகுப்புகள் நுண்கலைக்கழகம் முதலியவற்றில் சேர்ந்து கொண்டு சித்திரம், தையல் வேலை, சொல்வன்மை, நடிப்பு இவைகளில் எங்களுக்குள்ள திறனை வெளிப்படுத்தினோம். ஆங்கிலத்தில் தனிப்பட்ட பயிற்சியளிப்பதற்காக இவ்வருடம் முதல் படிவச் சிறுமிகளுக்கு Nursery Rhymes சொல்லிக் கொடுக்கப்பட்டன. அவர்கள் அதை மிக்க விருப்பத்தோடும், உற்சாகத்தோடும் கற்றுக் கொண்டனர்.

வழக்கம்போல் இவ் வருஷமும் நாங்கள் சொல்வன்மை, சொற்பொழிவு, கட்டுரை, பாரதி பாட்டு முதலிய போட்டிகளில் கலந்து கொண்டோம். 600-க்கு மேற்பட்டவர்கள் இறுதிப் போட்டிக்கு ஆஜராயினர். வெற்றி பெற்றவர்கள் 110 பேர். ஸ்ரீ சாரதா மாதர் ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் நடந்த தேவாரப் போட்டிக்கு 9 பேர் ஆஜராகி எல்லோரும் வெற்றி பெற்றோம்.

சங்கீத சபையின் முடிவு விழாவாகிய இசை விழாக் கொண்டாட்டத்தை இவ்வருஷத்திய விசேஷ நிகழ்ச்சிகளில் ஒன்றெனச் சொல்லலாம். அதில் 35பேர் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று தலைமை வகித்த ஸ்ரீ P. சாம்பமூர்த்தி, B.A., B.L., (Head of the Music Department, University of Madras) அவர்கள் எங்களுடைய முயற்சியையும், முன்னேற்றத்தையும்பெரிதும் பாராட்டினர்.

சத்சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் T. S. கண்ணபிரான் பிள்ளை அவர்களாலும், ஸ்ரீமதி R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்களாலும் நிகழ்த்தப்பட்ட 10 சொற்பொழிவுகளும் இராமாயணத்தின் சிறந்த கருத்துக்களையும், கீதையின் சாரத்தையும் நன்கு

உணர்த்தின. அவற்றைக் கேட்ட பின் நம் முன்னோர் காட்டியுள்ள சிறந்த வழிகளைக் கூடிய வரையில் பின்பற்ற வேண்டும் என்று உறுதிப்படுத்திக் கொண்டோம்.

சுறுசுறுப்போடு உழைப்பதற்கு இன்றியமையாத உடல் நலத்தைப் பாதுகாக்கத் தகுந்த தேகப்பயிற்சியும் இப் பாடசாலையில் அளிக்கப்படுகிறது. நாங்கள் தேகப் பயிற்சி வகுப்புகளில் நாள் தவறாமல் கலந்து கொண்டோம். வருடாந்திர விளையாட்டுப் போட்டிகளில் மிக்க ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்டோம். இம்முறை இத்துறையில் எங்களை மிக்க உற்சாகப்படுத்தியது யாதெனில் ஆசிரியைகள் எங்களுடன் போட்டியிட்டதே. எங்கள் இளமையின் வலிமைக்கு ஆற்றாத அவர்கள் Throw Ball விளையாட்டில் தோல்வியடைந்தனர். ஆனால் Tenniquoitல் நாங்கள் அவர்களுக்கு ஈடாக விளையாட முடியவில்லையாகையால் அவர்களே வெற்றி பெற்றனர்.

வருட இறுதியில் நாங்கள் ஆண்டு முழுவதும் தயாரித்த பல அரிய பொருள்களடங்கிய பொருட்காட்சி ஒன்றைத் தயாரித்தோம். விளையாட்டைப்போல் இதில் எல்லா மாணவியரும் பங்கெடுத்துக் கொள்ள வாய்ப்புக்கிட்டியது. இது எங்கள் அறிவை விருத்தி செய்வதோடு மனதிற்குச் சந்தோஷத்தையும் அளிக்கிறது.

மேற் சொன்னவை மட்டுமேயன்றி நாங்கள் தேசீய விழாக்களையும், சர்வதேச சம்பந்தமான விழாக்களையும் கொண்டாடினோம். சுதந்தர தினத்தன்று எங்கள் தலைவி கொடியைப் பறக்க விட்டு 'ஐந்து வருஷ சுதந்தரம்' என்பது பற்றி எடுத்துரைத்தார். சர்வோதய தினத்தன்று முதல்படிவ முதல் ஆரம்படிவ மாணவிகள் வரை யாவரும் காலையிலிருந்து மாலை வரை இடைவிடா பஜனை நிகழ்த்தினோம். சிலர் ராஜாஜி கூடத்திற்கும் சென்று பஜனை செய்தோம்.

ஐக்கிய நாடுகள் தினம், மனித உரிமை நாள் முதலியவற்றை சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், படங்கள் வரைந்தும், நடித்தும் கொண்டாடினோம்.

சென்ற ஆண்டு பொருட் காட்சிக்காகத் தயார் செய்த மாதிரித் தோட்டத்தின் வாயிலாய் அடைந்த உற்சாகத்தால் இவ் ஆண்டு பெரிய பரப்பில் காய்கறித் தோட்டத்தை அமைத்தோம். செடிகளைக் கண்ணுங் கருத்துமாய்ப் பராமரித்ததில் நல்ல பலனைக் கண்டோம். பலவிதக் காய்கறிகளை ஆசிரியைகளுக்கும், மாணவிகளுக்கும், இடைவேளை உணவு உதவும் தீனபந்து சங்கத்திற்கும் விற்பனை செய்து லாபம் பெற்றோம்.

பாடசாலை எமக்குச் செய்யும் பல நன்மைகளுக்கும் நாங்கள் மிக்க கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் தலைவிக்கும், ஆசிரியைகளுக்கும் பெருமையைத் தேடித்தரும் வகையில் நடந்து கொள்வதே எங்கள் சீரிய நோக்கம்.

R. அலமேலு, VI-A.
M. N. ரேவதி, VI-C.
காரியதரிசிகள்

பழைய மாணவியர் தினக் கொண்டாட்டம்

பழைய மாணவியர் சங்கத்தின் பதினைந்தாம் ஆண்டு விழா இவ்வருடம் ஜனவரி மாதம் 24-ந்தேதி சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. இப்பாடசாலையின் பழைய மாணவியும் அன்னையர் சங்கத்தின் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவருமான ஸ்ரீமதி லக்ஷ்மி நாராயணன், B.A., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துச் சிறப்புற நடத்தினர்.

பொங்கல் விடுமுறைக்குப் பின் பாடசாலை திறந்து ஒரு வாரத்திற்குள் இவ்விழா கொண்டாடப்பட்டது. எனவே, விழாவுக்கான ஏற்பாடுகள் விடுமுறைக்கு முன்னரே ஆரம்பித்து விட்டன. மணமான பின் பிறந்தகத்துக்குக் குதூகலமாக விஜயம் செய்யும் மகளை தாய் வீட்டில் ஆவலுடன் எதிர்பார்ப்பது போல், பழைய மாணவியர் பாடசாலைக்கு வரும் தினத்தை ஆசிரியைகளும் மாணவியரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். விடுமுறைக்குப் பின் பாடசாலை திறந்த போது யாவர் உள்ளத்திலும் மேலோங்கி நின்றது பழைய மாணவியர் தினம் தான்.

விழாவுக்கு முந்தின நாள் மூன்றும் மாடி, பிரார்த்தனைக் கூடம், வாயில், இவை நன்கு சுத்தம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டன. அன்று பிற்பகல் 3-30 மணிக்கு விழா ஆரம்பம் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. ஆசிரியைகளும் ஆறும் அமைப்பு மாணவியரும் விருந்தினரை வரவேற்க குங்குமம், சந்தனம், புஷ்பம் இவற்றோடு, வாயிலில் தயாராயிருந்தனர். நேரம் தவறாமை என்பதை முக்கிய பண்பாக உடைய இப் பாடசாலையில் படித்த நம் விருந்தினர் நேரம் தவறுவரோ? சரியாக 3-30 க்கு பிரார்த்தனைக் கூடம் நிரம்பி விட்டது. சுமார் 200 பழைய மாணவியர், பாடசாலை நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினர், நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஸர் S. வரதாச்சாரியார், கூட்டுக் காரியதரிசி குருகுல தர்மாசாரிய ஸ்ரீ K. ரங்கஸ்வாமி ஐயங்கார் முதலியவர்களும், அன்னையர் சங்க அங்கத்தினர் சிலரும், மற்றும் பள்ளியின் அன்பர்கள் சிலரும் அன்றைய விழாவுக்கு வந்திருந்தனர்.

குறித்த நேரத்தில், அதாவது 3-30 மணிக்கு விழா ஆரம்பித்தது. மூன்றும் மாடிக்குச் சிற்றுண்டி அருந்தச் சென்றனர் அனைவரும். பிரிந்தவர் கூடினால் பேச்சுக்குக் கேட்பானேன்? பல நாள் கழித்துச் சந்தித்த இந் நண்பர்கள் அளவளாவிப் பேசி மகிழ்ச்சியுற்று சாவகாசமாக சிற்றுண்டி யருந்தி, காரியக் கூட்டத்துக்காக பிரார்த்தனை மண்டபத்தில் கூடினர். இக்கூட்டத்தில் அருமையான இரு தீர்மானங்களை இவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தனர். பாடசாலையில் ஏதாவது ஒரு தகுதியான மாணவிக்கு இச்சங்கம் உபகாரச் சம்பளம் அளிப்பது,

அம்மாணவி நான்காம் படிவத்திலிருந்து ஆறும் படிவம் வரை மூன்று வருடங்கள் இவ்வுபகாரத்தைப் பெற்று, பாடசாலையை விட்டு நீங்கிய பின் நான்காம் படிவத்திலிருந்து மறுபடியும் ஒரு மாணவி உபகாரச் சம்பளம் பெறத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது ஒரு தீர்மானம். மற்றொரு தீர்மானம், ஸர் சிவஸ்வாமி அய்யரின் மறைவு தினத்தன்று ஆண்டு தோறும், பழைய மாணவியர் சங்கச் செலவில் ஏழை மாணவியருக்கு அன்னம் அளிக்க வேண்டும் என்பது. பழைய மாணவியர் பாடசாலையின்பால் கொண்டுள்ள அபிமானத்துக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

காரியக் கூட்டத்துக்குப் பின் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் பாடசாலைக்குப் புகழ் மாலை சூட்டினர். பிரார்த்தனைக்குப் பின் பாடசாலைத் தலைவியான ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T., அவர்கள் விருந்தினர்க்கு நல்வரவு கூறி, அக்கிராசனம் வகிக்கப் போகும் ஸ்ரீமதி லக்ஷ்மி நாராயணன், B.A., அவர்களை அறிமுகப்படுத்தி, அவரை விழாவை மேற்கொண்டு, நடத்தும்படி கேட்டுக்கொண்டார். அவைத்தலைவி பள்ளிக்கும் பாரதத் தாய்க்கும் வணக்கம் கூறியதற்கு நிர்வாகிகள் சார்பில் நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஸர் S. வரதாச்சாரியார் அவர்கள் பதில் கூறினர். மணமான பின் பெண் தாய் வீட்டுத் தொடர்பை விட்டு விடாமல் சந்தோஷத்துடன் பிறந்தகம் வருவது போல் பழைய மாணவியர் தாய்ச்சாலையில் குதூகலமாக சிறிது நேரம் கழிக்க வாய்ப்பு அளிப்பது பழைய மாணவியர் சங்கம் என்று குறிப்பிட்டார். ஆசிரியைகள் சார்பில் பேசிய ஸ்ரீமதி D. சந்திரா, B.A., B.T. அவர்கள், "பாடசாலைப் படிப்புக்குப் பின் வாழ்க்கையில் பல துறைகளில் ஈடுபட்ட பழைய மாணவியர், தம் குறிக்கோள்களைக் கடைப்பிடிப்பதற்காகச் செய்யும் போராட்டத்தின் நடுவில், சற்றே இளைப்பாறி, பல இன்ப நினைவுகளை மனதில் இருத்தி, உவகை கொள்ள உதவுவது பழைய மாணவியர் தினம். பாடசாலைக்கு இவர்கள் செய்யக்கூடிய உதவி நல்வாழ்க்கையில் ஈடுபட்டு அதன் புகழைப் பரப்புவதே" என்றார். பழைய மாணவியர் சார்பில் ஸ்ரீமதி J. ஜெயம், பாடசாலையை மிகவும் பாராட்டிப் பேசினாள். கொடையாளியான போஷகரோடு, அல்லும் பகலும் பாடுபடத் தயங்காத கூட்டுக் காரியதரிசியும் தலைவியும் அமைந்தது பாடசாலையின் தனிப்பெருமை என்றும், இங்குள்ள ஆசிரியைகளால் பலதுறைகளிலும் நன்கு பயிற்றுவிக்கப்படும் பாக்கியசாலிகளான மாணவியர் பொறுப்பு வாய்ந்தவராயிருக்கவேண்டும் எனவும் கூறினாள். அதற்குப் பதிலளித்த ஆறும் படிவ மாணவி சௌ. M. N. ரேவதி, இங்கு படிக்கும் ஒவ்வொரு மாணவியும் தன் பாடசாலையைப் பற்றிப் பெருமை அடை

கிறாள் என்றும், அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டியது மாணவியர் பொறுப்பு எனவும் உரைத்தாள். விருந்தினர் சார்பில் பேசிய ஸ்ரீமதி அமிர்தா ராமசுப்ரமண்யம் அவர்கள், பாடசாலையின் சேவையை மிகவும் பாராட்டினார்.

அவைத்தலைவியான ஸ்ரீமதி லக்ஷ்மி நாராயணன், B.A., அவர்கள் அடுத்தபடியாகப் பேசிய போது சமூக சீர்திருத்தத்தில் பெண்களுக்கு உரிய பொறுப்பைப் பற்றி வற்புறுத்திப் பேசினார். பெண்கள் உலகவிவகாரம் அறியாத கட்டுப் பெட்டிகளாக இல்லாமல், தாம் கீழ்ப்பட்டவர் என்ற மனப்பான்மையை நீக்கி, தம் அறிவை வளர்த்து, வீட்டையும், சூழ்நிலையையும், சீர்திருத்த வேண்டும்; குழந்தைகளைச் சிறந்த அறிவும் ஒழுக்கமும் ஆரோக்கியமும் உடையவர்களாக வளர்க்க வேண்டும் என்றார். தாம் இப் பாடசாலையில் படித்த காலத்தில் இருந்த கட்டிடத்தையும் கூரை வேய்ந்த குடிசைகளையும் நினைத்து இப்போதுள்ள பிரம்மாண்டமான கட்டிடத்தையும் பார்த்தால் அல்லாவுதீனும் மாயவிளக்கும் என்கிற கதை ஞாபகம் வருவதாகக் கூறினார்.

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு கதம்ப நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. பழைய மாணவியரும் ஒரு ஹாஸ்ய நாடகம் ஒன்றைத் தயார் செய்து சபையினரை வயிறு வலிக்கும்படி சிரிக்க வைத்தனர்.

கடைசியாக வந்தனோபசாரத்துடன் விழா முடிந்தது. ஆயினும் பாடசாலையை விட்டுச் செல்ல யாருக்கும் மனம் இல்லை. பழைய நண்பரைச் சந்திக்கும் அரிய சந்தர்ப்பம் அல்லவா? இருட்டி விட்டதையும் பொருட்படுத்தாமல் உற்சாகத்தோடு நண்பருடன் பேசிவிட்டு, மறுபடி இப்படிப்பட்ட சந்தர்ப்பத்துக்காக ஒரு வருடம் காத்திருக்க வேண்டுமே என்ற ஏக்கத்துடன், மனமில்லாமல் பிரியா விடைபெற்றுச் சென்றனர் விருந்தினர்.

கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைக்கும் பொற் சங்கிலியான இச்சங்கம் இறைவன் அருளால் ஓங்கி வளரவேண்டும்.

G. சாந்தா, B.A., B.T.
N. தாயம்மாள்.
காரியதரிசிகள்.



P. Nithyakalyani, IV-C.

ஒறுத்தலினும் பொறுத்தல்மேல்

அன்னையர் சங்கம் 1952-53

இந்தச் சங்கம் சென்ற ஏழு ஆண்டுகளாக நல்வாழ்வு வாழ்ந்து திடமான நிலையை அடைந்திருக்கிறது. பள்ளிக்கூடத்தில் உள்ள பல சங்கங்களில் அன்னையர் சங்கம் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது என்று சொல்லலாம். அன்னையர் தங்கள் மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பல அலுவல்களிலும் மிக உற்சாகத்தோடு எங்களுடன் பங்கெடுத்துக் கொள்வதைப் பற்றி நாங்கள் மகிழ்ச்சியுறுகிறோம்.

காரியக் கமிட்டி:

தற்போது உள்ள காரியக்கமிட்டியில் 20 உற்சாகமிகுந்த அங்கத்தினர்கள் இருப்பதால் எந்த அலுவலையும் மிக வெற்றிகரமாக நடந்திக் கொடுப்பதில் அவர்கள் சிறிதும் தளருவதில்லை. ஸ்ரீமதி பாஷ்யம் அய்யங்கார் அவர்கள் இதன் கௌரவ அக்கிராசனராக இருந்து வருவதுபற்றி நாங்கள் பெருமை கொள்கிறோம். காரியக் கமிட்டி அங்கத்தினர்களுடன் தற்போது இதில் 50 ஜீவிய கால அங்கத்தினர்களும் 400 சாதாரண அங்கத்தினர்களும் உள்ளார்கள் என்பதே இப் பாடசாலையின் சிறந்த அம்சமாகும்.

நிகழ்ச்சிகள்

கண்காணிப்பு தினம்:

சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் நாள் வகுப்புகளில் நடக்கும் போதனு முறைகளைக் காண சுமார் 50 அன்னையர் விஜயம்செய்து எங்களைக் கௌரவித்தனர்.

கண்காட்சி:

சங்க ஆண்டு விழா கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாக விளங்குவது கண்காட்சி என்று கூறுவது மிகையாகாது. அன்னையர் தங்கள் பகுதியில் திறமையான வேலைப்பாடமைந்த பொருள்களைச் சேகரம் செய்து அவைகளை ஒழுங்காக அமைத்திருந்தனர். முக்கியமாக இப்பகுதியைச் செவ்வனே தயாரித்த பெருமை ஸ்ரீமதிகள் ருக்மணி நாராயணன், R. சீதா, பட்டம்மாள் கோபாலன், T. S லீலா இவர்களைச் சாரும்.

கண்காட்சியில் மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் காரியக் கமிட்டியில் உள்ள சிலர் மிக்க ஆர்வத்துடன் தங்கள் சொந்தச் செலவில் வனிலா கேக், பாதாம் கேக், நட்குல்லா, பிஸ்கட், லட்டு, மைசூர்பாகு, மோஹன்டால், மிக்ஸர் முதலிய தின்பண்டங்களைத் தயாரித்து, அவைகளைக் கண்காட்சி விற்பனைச் சாலையில் விற்கக் கொடுத்ததேயாகும். அதன் மூலம் கிடைத்த ரூ. 53—14—0 யை கண்காட்சியின் செலவிற்காக எடுத்துக் கொள்ள அவர்கள் சம்மதித்ததும் குறிப்பிடத்தக்க தாகும்.

அன்னையரின் கைங்கரியம்:

நம் நாட்டில் தொன்றுதொட்டுக் கொண்டாடப்பட்டு வரும் நவராத்திரி விழாவைச் சென்ற ஆண்டு பாடசாலையில் மிகச் சிறந்த முறையில் கொண்டாடினோம். குழந்தைகளால் கொண்டுவரப்பட்ட புதுமையான பொம்மைகளும், பள்ளிக் கூடத்தில் உள்ள அற்புதமான பொருள்களும் எல்லாப் படிகளையும் மிக நன்ருக அலங்கரித்தன. அன்று கொலுவிற்கு அழைக்கப்பட்ட சுமார் 250 அன்னையர்களுக்கு மஞ்சள், குங்குமம், தேங்காய் முதலியன வழங்கும் கைங்கரியத்தைச் சில அன்னையர்கள் ஏற்றுக் கொண்டனர். இன்னும் பாடசாலையில் மாணவிகளால் நடிக்கப் பெற்ற 'சாவித்திரி' நாடகத்திற்கு அன்னையர்கள் மிகுதியாக வந்திருந்து பொருள் ஈட்டும் பணியில் உதவினர். பாடசாலை ஸ்ரீராம நவமி உற்சவத்திற்கும் அவர்கள் நன்கொடை அளித்து உற்சவத்தைச் சிறப்பாக நடத்த உதவி புரிந்தார்கள்.

விளையாட்டிலும் அன்னையர்:

பள்ளிக்கூடத்தில் நடைபெற்று வரும் வருடாந்திர விளையாட்டு வைபவத்தில் அன்னையர்களும் கலந்து கொண்டது யாவருக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது. சுமார் 20 அன்னையர் போட்டியில் சேர்ந்து விளையாட்டு மைதானத்தில், சட்டங்களுக்கு உட்பட்டு அமைதியாக விளையாடினதைக் கண்டு யாவரும் களித்தனர்.

இன்னும் அவ்வப்போது பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சத்சங்க, சங்கீத சபைகளின் ஆதரவில் நடந்த உபந்நியாசங்கள், பஜனைகள், கச்சேரிகள் முதலியவற்றிற்கு அன்னையர் வந்திருந்து தங்களுக்குப் பாடசாலையின் மீதுள்ள தொடர்பை நிலை நாட்டினர்.

முடிவுரை:

இவ்விதம் பல சந்தர்ப்பங்களிலும் எங்களுடன் ஒத்துழைத்துச் சங்கத்தை மேன்மைப்படுத்திய அன்னையர்களின் உதவியை நாங்கள் என்றென்றும் எதிர்பார்க்கிறோம். மிகப் பெரிய அறிவாளியும், திறமைசாலியுமான எங்கள் தலைவி ஸ்ரீமதி S. செல்லம் அவர்களின் ஆதரவும், இதன்பால் அவர்கள் கொண்டுள்ள தனி மதிப்பும் இச்சங்கத்திற்கு என்றென்றும் நிலைத்திருக்கும் என்று சொல்லிக்கொள்வதில் எங்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. எல்லாம் வல்ல பரம்பொருள் இச்சங்கம் என்றும் நந்தாவிளக்காகப் பிரகாசிக்கும்படி அருள் புரிவாராக.

வாழ்க இச்சங்கம்.

V. **ராஜம்மாள்,**
காரியதரிசி

சங்கீத சபை

நம் பாடசாலையில் சங்கீத சபை ஆரம்பித்து மூன்றாண்டுகளாகின்றன. நம் மாணவியர் கல்வியோடு நில்லாது இசைக்கலையிலும் சிறந்து விளங்கவேண்டு மென்பதே இச் சபையின் நோக்கமாகும். ஆதலின் இச்சபையின் ஆதரவில் சங்கீதக் கச்சேரிகள், இசை சம்பந்தமான சர்ச்சைகள் முதலியன நடத்தப் படுகின்றன. இவைகளின் மூலம் உயர்தரச் சங்கீதத்தைக் கேட்க வசதியில்லாத மாணவியரும் பெரும் பயனடைகின்றனர்.

சென்ற இரண்டு ஆண்டுகளில் சங்கீத வித்வான்கள் ஸ்ரீ களக்காடு ராமநாராயணன், ஸ்ரீ மணக்கால் ரங்கராஜன், ஆகிய இவ்விருவருடைய இன்னிசை விருந்துகள் தகுந்த பக்க வாத்தியங்களுடன் நடந்தேறின. மேலும் பேராசிரியர் ஸ்ரீ P. சாம்பமூர்த்தியவர்கள் தியாகராஜ சுவாமிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில அரிய சம்பவங்களைப் பற்றி எடுத்துரைத்தார். இவற்றினால் மாணவியர் செவி யுணவோடு மட்டுமன்றி அறிவு வளர்ச்சியையும் பெறுகின்றனர் என்று கூறுவது மிகையாகாது.

இவ் ஆண்டு ஆரம்ப விழாவன்று பேராசிரியர் ஸ்ரீ R. ஸ்ரீனிவாசனவர்கள், 'சங்கீதமும் வாழ்க்கையும்' என்பதைப்பற்றிப் பேசினர். நவம்பர்த் திங்கள், 8-ம் தேதியன்று, மருத்துவக்குடி ராஜகோபாலய்யரின் இன்னிசைக் கச்சேரி இனிது நடைபெற்றது.

இவ்வருடத்திய முடிவு விழா பிப்ரவரி மாதம் முதல் தேதி, ஞாயிறன்று 'சங்கீத விழா' வாகக் கொண்டாடப்பட்டது. மாணவியர்களைக் கொண்டு இதுபோன்ற சங்கீத விழாவை நடத்தியது இதுவே முதற்தடவை யாகும். இதனில் முப்பத்தைந்து மாணவியர் பங்கெடுத்துக் கொண்டனர். சுமார் 7-ம் நூற்றுண்டிலிருந்து 20-ம் நூற்றுண்டு வரை ஏற்பட்டுள்ள சங்கீத வளர்ச்சியைக் காட்டுவதே இதன் சிறந்த அம்சமாகும். அஃதாவது, முதலில் தேவாரம், திருப்புகழ் பாடல்களில் ஆரம்பித்து, பஜனை, வீணை கோஷ்டி, பரதநாட்டியம், காலக்ஷேபம், ராகம், தானம், பல்லவி, நிருத்யம், வாத்யகோஷ்டி ஈறாக, முறையே சங்கீதத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் ஆசிரியைகளின் ஒத்துழைப்பால் சிறப்பாக நடந்தேறின. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் ஸ்ரீ P. சாம்பமூர்த்தியவர்கள் கூறிய புகழுரைகளாவன:

"நான் பள்ளி மாணவியர் நடத்துவது சுமாராய்த்தான் இருக்குமென்று நினைத்தேன். இங்கு நடந்ததைப் பார்த்த பிறகு மேலும் ஒரு மணிநேரம் நடந்திருந்தால் கூட சலிப்பேற்படாது என்று தோன்றுகிறது. தேவாரம், பாவத்துடன் பாடினர்கள். ஸ்ரீராம பஜனையை மெய்மறந்து சம்பிரதாயப்படிச் செய்தார்கள். பரத நாட்டியத்திற்கு கடினமான பதவர்ணத்தை

எடுத்துக்கொண்டும், திறம்பட நடன மாடினர். வீணைகோஷ்டி நன்கு வாசித்தனர். காலக்ஷேபத்தில், பேச்சு, பாட்டு, பாவனையாவும் மிகவும் பொருத்தமாக இருந்தன. ராகம், தானம், பல்லவி நன்கு அமைந்தன. பிடில் அபூர்வமாக வாசித்தாள். ஆண்டாள் திருப்பாவைக்கு நிருத்தியம் காட்டியது, கருத்தை விளக்குவதுடன், பக்தி யூட்டுவதாகவும் இருந்தது. இத்தகைய நிகழ்ச்சியை மற்றொரு முறை நடத்தி, பாடசாலையிலிருப்பவர்கள் மட்டுமல்லாமல் மற்றவர்களும் கண்டு களித்து மாணவியரின் திறமையை அறியவேண்டும்"

அப்பெரியாருடைய ஆசியைப் பூரணமாகப் பெற்ற இச்சங்கம் ஆண்டுதோறும் முன்னேறி இசைப் பணி புரிய கடவுள் அருள்புரிவாராக.

M. ஞானம்பாள்,
காரியதரிசி.

சத் சங்கம்

சத் சங்கம் என்ற வடமொழிச் சொல் 'நல்லினம் சேர்தல்' என்று பொருள்படும். மனிதனுக்கு இயற்கையாகவோ சூழ்நிலையினாலோ ஏற்பட்ட தீய உணர்ச்சிகளை அகற்றுவதற்கு நல்லார் சேர்க்கை அவசியமாகும்.

உண்மையான கல்வி முறையில் மதபோதனையும் ஒரு அம்சம். நம் மதத்தில் உள்ள பல அரும் பெரும் விஷயங்களை அறிந்து கொள்வதற்கும், உள்ளத்தில் உயர்ந்த நோக்கங்களைக் கொள்வதற்கும், நம் பாடசாலையில் சத் சங்கம் பெரிதும் உதவுகின்றது.

வருடந்தோறும் நடக்கும் விநாயக சதுர்த்தி, ஸ்ரீஜயந்தி, விஜயதசமி, ஸ்ரீராமநவமி, இந்த நான்கு விசேஷ பூஜை தினங்களிலும், அந்தந்தப் பூஜைக்கு ஏற்ப பல அரிய விஷயங்களை வெளியிலிருந்து பல பெரியார்கள் வந்து குழந்தைகளுக்கு எடுத்துச் செல்வதுண்டு. இதைத் தவிர, இவ்வருடம் சத்சங்கத்தின் ஆதரவில் நளவெண்பா, பகவத் கீதை, கம்பராமாயணம் முதலியவற்றிலிருந்து சிறந்த கருத்துக்களை அறியும் பாக்கியமும் நமக்குக் கிடைத்தது.

முக்கியமாக, கீதையின் சாரத்தை ஐந்து உபந்நியாசங்களில் எடுத்துச் சொன்ன சகோதரி ஸ்ரீமதி R. S. சுப்புலட்சுமி அம்மாள் அவர்களின் சொற் பொழிவு மிக அருமையாக அமைந்தது. அதன் சாராம்சமாவது:

"போர்க்களத்தில் அர்ஜுனனுக்குப் பகவான் செய்த உபதேசத்தில் முக்கியமானது மனிதன் பரமாத்மாவை அடைவதற்கு உதவும் பல

மார்க்கங்கள். இவற்றில் சிறந்தவை பக்தியோகம், ஞானயோகம், கர்மயோகம் என்பவை. பக்தியும் அறிவும் செயலும் ஒன்ருேடு ஒன்று சேர்ந்து இருப்பதே சிறந்தது. அறிவு இல்லாமல் செய்யும் செயல் விளங்காது. செயல் இல்லாமல் வெறும் பக்தியும் பயன்படாது. இவ்வாறு இவை ஒன்ருேடு ஒன்று கலந்தே இருக்கவேண்டும்.

பரமாத்மாவை மனிதனுல் ஐம் புலன்களாலோ, வாக்கினுலோ, அறிவினுலோ, மனதினுலோ உணர முடியாது. இவைகளுக்கு எட்டாத பொருளாகக் கடவுள் இருக்கிருர். உருவில்லாதவராக அவரை வழிபடுவது சிரமம். ஆதலால் அவரை உருவகப் படுத்தி ஒரு வடிவத்தோடு உபாசிக்கிருேம்.

இவ்வாறு உபாசிப்பதில் கர்மயோகத்தைக் கடைப்பிடிப்பவன் தன் கடமையை பிரதி பலன் எதிர்பாராமற் செய்யவேண்டும். மனிதனுகப் பிறந்தவன் செயல் இல்லாமல் வாழ முடியாது. தன் ஜீவயாத்திரைக்காகவாவது செயல் ஆற்றவே வேண்டும். நல்வினைகளைச் செய்யவும் தீவினைகளை அகற்றவும் நாம் பழகவேண்டும். சுயநலத்துக்காகச் செய்யும் காரியங்களை விட்டு விட்டுப் பிறர் நலத்துக்காக உழைக்க வேண்டும்.

எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதை நன்ருக அறிந்து செய்ய வேண்டும். ஆகவே கர்மயோகத்தைக் கைப்பற்றுவதற்கும் ஞானம் அவசியம். ஞானத்தினுல் தீய எண்ணங்கள் அழிக்கப்பட்டு மனம் பரிசுத்தமாகவும் அமைதியாகவும் இருக்கும். உறுதியான ஞானம் உள்ளவன் எல்லாப் பற்றுக்களையும் ஒழித்து ஆத்ம திருப்தியடைகிருன். துக்கம் வந்தபோது அவனுடைய மனம் தளராது. சுகத்தில் மனம் ஈடுபடாது. மனதை நன்கு அடக்கி, யதேச்சையாக வந்த லாப நஷ்டம், சுக துக்கங்களை, இவன் பற்று இல்லாமல் அநுபவிப்பான்.

நல்ல ஞானத்தை வளர்த்தவன் பகவானை எங்கும் காண்பான். உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்கள் எல்லாவற்றிலும் பகவானுடைய ஸ்வரூபம் உண்டு. மலைகள், நதிகள், மரங்கள், புஷ்பங்கள், மிருகங்கள், மனிதர்களில் ஜாதிகள், அரசர்கள் இந்த ஒவ்வொரு வகையிலும் மிகச் சிறந்ததாக விளங்கும் பொருள் தாமே என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியிருக்கிருர்."

பெண்களுக்கு சரீரபலம் குறைவாக இருந்தாலும் அறிவு பலம் அதிகம் உண்டு, இவர்களுக்குத் தனி சீலமும் பண்பாடும் வேண்டும். கீர்த்தி, மங்களகரம், நல்ல வாக்கு, ஞாபக சக்தி, ஆழ்ந்த அறிவு, தைரியம், பொறுமை, இவை பெண்களுக்கே உரித்தான விசேஷ குணங்கள். இப்படிப்பட்ட சீரிய குணங்களாலும் நல் ஒழுக்கத்தாலும் பெண்கள் பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் புகழைத் தேடிக் கொடுக்க வேண்டும்.

சத் சங்கத்தைப் பற்றி ஆதி சங்கராச்சாரியார் கூறியிருப்பது பின் வருமாறு:

"நல்லவர்களோடு அடிக்கடி பழகுவதால் பற்று இல்லாத தன்மை ஏற்படும். அதிலிருந்து உலகத்தைப் பற்றிய மாயை அகலும். அதன் பின்னர் அசையாத, தெளிவான உண்மை புலப்படும். அதனால் ஜீவன் முக்தி கிடைக்கும்."

G. சாந்தா, B.A., B.T.

திருக்காட்டுப்பள்ளி இன்பச் செலவு

வழக்கப்படி இவ்வாண்டும் நவராத்திரி விடுமுறையில் ஆசிரியர் உல்லாசப் பிரயாணம் இனிது நடந்தேறியது. இம்முறை தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் திருக்காட்டுப் பள்ளிக்குச் சென்றோம். மற்ற இடங்களைப் போலன்றி பெயரளவிலேயே இதற்கு ஒரு புனிதத் தன்மையிருந்தது. நமது ஒப்பிலாப் பெரியார் ஸ்ரீமான் சிவஸ்வாமி அய்யரால் ஆண் பிள்ளைகளுக்கென நிறுவப்பட்ட பாடசாலை அங்குள்ளதே அதற்குக் காரணம். எனவே நம் சகோதரப் பள்ளியைக் காண வேண்டும் என்னும் அவாவினால் தூண்டப்பட்டு செப்டம்பர் மாதம் 19-ந் தேதியன்று இரவு தலைவியுட்பட 21 பேர் புறப்பட்டோம். எங்களை வழியனுப்பப் பாடசாலைக் காரியதரிசி ஸ்ரீ K. ரங்கஸ்வாமி அய்யங்காரும் மற்றும் சில நண்பர்களும் வந்திருந்தனர்.

எங்களுக்கெனத் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வண்டியில் மிக்க வசதியுடன் இரவைக் கழித்து விடியற்காலையில் தஞ்சையில் இறங்கி வேறு வண்டி மாறி, சுமார் அரைமணி நேரத்தில் பூதலூரை அடைந்தோம். அங்கு எங்கள் வரவை நோக்கிக் காத்திருந்த திருக்காட்டுப்பள்ளி ஆசிரியர் இருவர் எங்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று தங்களிருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றனர். விடியற் காலையில் சில்லென வீசிய காற்றும், வழியிலே நாங்கள் கடந்த சில சிற்றாறுகளும் கண்ணுக் கெட்டியதூரம் பரவிக் கிடந்த நெடிய பசுமையான வயல்களும் எங்களைப் பரவசப்படுத்தின. பாடசாலை வாயிலில் இறங்கி யாவரும் உள்ளே நுழைந்தவுடன் அதன் தலைமையாசிரியரான ஸ்ரீமான் S.R. பாலசுப்ரமண்ய அய்யர், M.A., L.T., அவர்கள் எங்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். எங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதியில் நாங்கள் தங்கினோம்.

நாங்கள் முதலில் அப்பாடசாலையோடு சம்பந்தப்பட்ட பல இடங்களைப் பார்வையிட்டோம். தலைவரால் ஏற்படுத்தப்பட்ட மாட்டுப் பண்ணையில் போஷிக்கப்பட்டுவரும்

பசுக்களையும், கன்றுகளையும் கண்டு அவைகளோடு விளையாடிக் குதூகலமடைந்தோம். பாடசாலையையும் அதைச் சார்ந்த பொருட் காட்சி சாலையையும் சுற்றிப் பார்த்தபின் சிவஸ்வாமி புரத்தை அடைந்தோம். அங்கு பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற வயல் வெளிகளைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தோம். அவ்வயல்களுக்கு இடப்படும் எருக்களைப்பற்றியும் நீர்பாசன வசதிகளைப் பற்றியும் தலைமையாசிரியர் எடுத்துக் கூறினர். நாங்கள் நகரத்தில் காண்பதற்கரிதான அப்பரந்த வயல் வெளியில் 2 மணி நேரத்திற்குமேல் ஆனந்தமாய்க் கழித்தோம். தென்னாட்டில் தமது ஜில்லாவிலொன்றும், சென்னையிலொன்றுமாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் இரு பள்ளிகளை நிறுவிய பெரியார் ஸ்ரீமான் P. S. சிவஸ்வாமி அய்யரின் கிராமமாகிய பழமானேரிக்குச் சென்று அவர் இல்லத்தைக் காணும் பாக்கியத்தையும் பெற்றோம். அருகிலுள்ள பல ஸ்தலங்களைத் தரிசிக்கும் பேறும் எமக்குக் கிட்டியது. அவ்வூரிலேயே உள்ள அக்னீசுவரர் கோவிலையும், ஆஞ்சநேயர் கோவிலையும் தரிசித்ததோடு அண்மையிலுள்ள செந்தலை, திருவாலம்பொழில், திருக்கண்டியூர், கோவிலடி, திருவையாறு முதலிய திவ்யஸ்தலங்களையும் தரிசித்தோம். திருவையாற்றில் கர்நாடக சங்கீதத்துக்கே உயிரளித்த மகானை தியாகப்ரம்மத்தின் சமாதிக்குச் சென்றோம். அழகான நிம்மதியான இடம். அருகே பாயும் காவிரியின் தண்மையான காற்று சில்லென வீச, நாங்கள் தியாகப்ரம்மத்தின் சந்நிதியில் இன்னிசை கானம் பொழிந்தோம். பின்னர் அம்மகான் குடியிருந்த இல்லத்திற்குச் சென்று, அவருடைய கொள்ளுப் பேரரான ஸ்ரீ ராமுடு பாகவதரையும், தியாகய்யரால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ ராம பட்டாபிஷேகப் படத்தையும் தரிசித்து மனமகிழ்ந்தோம். ஊருக்குத் திரும்புகையில் திருச்சியில் தங்கிய சில மணி நேரத்தில் மலைக் கோட்டைக்குச் சென்று தாயுமானவரையும் தரிசித்தோம்.

ஆசிரியர் உல்லாசப் பிரயாணம் மனமகிழ்ச்சிக்குமட்டு மன்றி அறிவு வளர்ச்சிக்கும் பயன்படும்படி அமைகிறது. அதற்கேற்பச் சிறிது தொலையிலுள்ள கல்லணையைப் பார்க்கச் சென்றோம். மிக ரம்மியமான இடம். அங்கு காவிரி 5 பிரிவுகளாகப் பிரிகிறது. அவ்விடத்தின் அழகை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அவ்வழகிய இடத்தை விட்டுவர மனமின்றி அருகிலுள்ள பிரயாணிகள் விடுதியில் சற்று இளைப்பாறியபின் வீடு திரும்பினோம்.

இதைப்போன்ற உல்லாசப் பிரயாணம் இதுவரை நடந்ததில்லை யென்றே சொல்லவேண்டும் மூன்று நாட்களும் கிடைத்தற்கரிய புனிதமான காவிரி ஸ்நானம்; இடைவிடாத ஆடல் பாடல், கேளிக்கைகள். அவற்றில் எங்கள் தலைவியும் பங்கெடுத்துக் கொண்டது எங்களுக்கு மேலும் உற்சாகத்தை யளித்

தது. மிகக் குறைந்த செலவில், தொலைவான இடத்திற்கு, மிக சௌகரியமாகப் பிரயாணம் செய்தது இம்முறையே.

ஊர் திரும்ப ஆயத்தமாகும் பொழுது இப்பிரயாணம், இத்துணை சீக்கிரம் முடிந்துவிட்டதே என இருந்தது. காரணம் அப்பாடசாலைத் தலைவரும், உதவி ஆசிரியர்களான ஸ்ரீ V. D. மணி, கிருஷ்ணமூர்த்தி என்ற இருவரும் சகோதரர்களைப்போன்று எங்களை வரவேற்று எல்லா வசதிகளையும் செய்ததோடன்று எங்களுடன் வழித்துணையாய் வந்து எல்லா இடங்களையும் காண்பித்து எங்களை மகிழ்வித்ததேயாகும். அவர்கள் செய்த உபசாரங்கள் எண்ணிலடங்கா. அங்கு அவர்கள் அன்புடன் அளித்த உணவு வகைகளையும், பக்ஷண வகைகளையும் எங்கள் நா மறவாது. அவர்கள் உள்ளூரிலுள்ள இடங்களையும், சுற்று வட்டாரத்திலுள்ள இடங்களையும் பார்க்கப் 'பஸ்' வசதி செய்திராவிடில், நாங்கள் அவ்வளவு சௌகரியமாக அவ்விடங்களைக் கண்டிருக்க முடியாது. நாங்கள் அவ்வூருக்குச் செல்லத் திட்டமிட்டது முதல், சென்று திரும்பிவரும் வரை அவர்கள் எங்களுக்குச் செய்த எல்லா உதவிகளுக்கும் நாங்கள் என்றென்றும் கடமைப் பட்டுள்ளோம். இதுபோன்றே திருச்சியிலும் எங்களில் ஒருவரான ஸ்ரீமதி ஜானகியம்மாளின் உறவினராகிய ஸ்ரீமான் M. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி, B A, BL., அவர்கள் எங்களுக்குச் செய்துதந்த சௌகரியங்களினால் அங்கு தங்கிய சிறிது நேரத்தில் திருச்சியைச் சுற்றிப் பார்க்கவும், சௌகரியமாக மதராஸுக்குப் பிரயாணம் செய்யவும் முடிந்தது.

இவ்வளவு வெற்றிகரமாக நடந்த இவ் இன்பச் செலவை ஏற்பாடு செய்த நம் தலைவிக்கும், பாடசாலை நிர்வாகிகளுக்கும், அங்கு நம்மை வரவேற்று உபசரித்த தலைமை ஆசிரியருக்கும், உதவி ஆசிரியர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

R. சரஸ்வதி பாய்.

தீனபந்து சங்கம்

எதிர்கால இந்தியாவின் பிரஜைகளைக் கல்வியறிவிற் சிறந்தோராகவும் ஆரோக்கிய முள்ளவர்களாகவும் உருவாக்கும் பொறுப்பு, பாடசாலைகளைச் சார்ந்ததே. அதை முற்றிலும் உணர்ந்த நம் பாடசாலை, மாணவிகளின் கல்வியபிவிருத்தியை மட்டுமல்லாது உடல் நலத்தையும் நன்கு கவனித்து, போதிய போஷணைக்குப் பொருள் வசதியற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, வைத்திய உதவி முதலியவற்றை அளிக்கிறது.

1948-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 'தீனபந்து சங்கம்' ஏற்பட்டு, 'குசேல நிதி' யின் ஆதரவில் அவ் அரும்பணியைத் திறம்பட ஆற்றிவருகிறது. இச்சங்கம் இலவச உணவிற்குப் பாத்திரமானவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தினந்தோறும் இடைவேளைப் போஜனம் அளிக்கிறது. இன்று, இச்சங்கம் நூற்றுஆறு குழந்தைகளுக்கு இவ்வசதி செய்கிறது. ஒவ்வொரு வருடமும், விஜய தசமி யன்று, தகுதியுடைய இருநூற்றைம்பது மாணவியருக்கு இரவிக்கைத் துணி வழங்குகிறது. பலருக்குப் பள்ளிச் சம்பளம் கட்டியும் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தும் பராமரிக்கிறது. வைத்தியப்பரிசோதனைக்குப் பிறகு போஷணைக் குறைவுள்ள நூறு குழந்தைகளுக்கு மாலையில் ஒரு கோப்பைப் பால் தந்து ஆதரிக்கிறது. இதற்குத் தேவையான பாலை ஐக்கிய நாடுகள் சங்கத்தாரும், இந்திய ஊழியர் ஸ்தாபனச் சங்கத்தாரும் அனுப்பிப் பேருதவி புரிவது போற்றத்தக்கது. வைத்திய உதவி தேவையான குழந்தைகளுக்கு, மருந்துகள் கொடுத்துப் பாதுகாக்க, எம் தலைவியின் பெருமுயற்சியின் பயனாய், 'சீதாலட்சுமி இலவச மருத்துவ நிலையம்' என்ற பெயரால் மருத்துவ சாலையொன்று சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'குசேல நிதி' சுமார் ஐந்நூறு குழந்தைகளுக்குப் பல விதத்திலும் பயன்படும் நிலையில் இருப்பது அன்பர்கள் ஆதரவால்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் பழைய மாணவியரும், அன்னையரும் அவ்வப்போது நன்கொடை வழங்குகின்றனர். மாணவியர் ஆண்டுதோறும் நடிக்கும் நாடகங்களின் மூலமாக வசூலிக்கப்படும் தொகை இந்நிதிக்கு அளிக்கப்படுகிறது. மாணவியர் அனைவரும் இதற்குச் சிறிது பொருள் வழங்கிப் பெருமையுற பாடசாலை 'வருடாந்திர விற்பனை விழா' சந்தர்ப்பம் அளிப்பதால், சிற்றுண்டி விற்பனையில் கிடைக்கும் இலாபம் நிதியில் சேருகிறது.

நம் பாடசாலையின் பலதரப்பட்ட மாணவிகளின் தேவைகளை உணர்ந்து, அவர்களுடைய நன்மைக்காகவே பாடுபடும் இக் 'குசேல நிதி'யைக் 'குபேர நிதி' யாக்குவது அன்பர்கள் பொறுப்பு என்று எடுத்துக் கூறுவது மிகையாகாது. 'தீனபந்து' சங்கம் என்றென்றும் தன் இலட்சியங்களை நிலைநாட்ட இறைவன் அருள் புரிவானாக!

V. ஸரோஜினி.

மாணவியரின் சிலவகை நோய்கள்

குழந்தைகளுக்குச் சாதாரணமாக அடிக்கடி வந்து தொந்திரவு கொடுக்கும் நோய்கள் சளியும் இருமலும் தான். நோய்க் கிருமிகள் நாம் சுவாசிக்கும் காற்றில் வியாபித்துக் கிடந்தபோதிலும் எல்லோருக்கும் எப்பொழுதும் நோய் ஏற்படுவதில்லை. நோயை எதிர்த்துத் தடுக்கும் சக்தி (**இம்யூனிடி**) நம் இரத்தத்தில் இருப்பதால் நோய்க் கிருமிகள் உட்புகுந்தாலும் நோயை உண்டாக்க முடிவதில்லை. உடற் சோர்வோ, ஆரோக்கியக் குறைவோ, போஷணைக் குறைவோ ஏற்படும்போது இயற்கை சக்தி குறைவதனால் நோய்க் கிருமிகள் பரவி ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பிக்கின்றன.

சளி: சளி அல்லது ஜலதோஷம் '**வைரஸ்**' என்னும் கண்களுக்குப் புலப்படாத ஒருவித நுண்ணிய கிருமியால் ஏற்படுகின்றது.

நோயின் அறிகுறி: பசியின்மை, சோர்வு, படிப்பில் அசிரத்தை, தும்மல், தலைவலி, இவற்றுடன் நோய் ஆரம்பமாகும். கண்களும் முகமும் சிவக்கும். முதல் நாள் மூக்கினின்று ஜலம் கசிந்தபடி யிருக்கும். மறுநாள் நீர் கெட்டியாகி, சளியாக மாறி, மூக்கை அடைத்து, சுவாசப் போக்கைத் தடைசெய்யும். சில சமயம் சுரம் வருவதும் உண்டு.

சிகிச்சை: **ஆரோமைசின், பென்சிலின், ஸல்பானிலமைட்** போன்ற மருந்துகளை உபயோகப் படுத்தலாம். இரண்டு தேக்கரண்டி **மில்க் ஆப் மெக்னீஷியா**வை உள்ளுக்குச் சாப்பிடுவதால் மலப்பிரவர்த்தியாகி சளி உடனே குறையும். கடுமையான சளி நோய்க்கு ½% **எபிடிரின் சொல்யூஷனை** இரண்டுமணிக் கொரு தடவை மூக்கில் இரண்டு சொட்டுகள் விட்டால் நோய் குறையும்.

இருமல்: இருமல் ஒரு தனிப்பட்ட நோயல்ல; நோயின் அறிகுறியே. **பிரான்கைடிஸ்** அல்லது மார்ச் சளி, தொண்டை ரணம், **டான்ஸில்** வீக்கம், உள்நாக்கு வளர்தல் முதலிய காரணங்களினால் இருமல் உண்டாகும்.

சிகிச்சை: மார்ச் சளியால் ஏற்படும் இருமல் சளியோடு வெளிப்படும். இதைப்போக்க, தினம் இரண்டு முறை முதுகு மார்பு முதலிய இடங்களில் தவிடு வறுத்து ஒத்தடம் போடலாம். தொண்டை ரணத்தால் ஏற்படும் இருமலுக்கு, **மாண்டில் சொல்யூஷன், கிளிஸரின் டானிக்**: இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தொண்டையில் பூசவேண்டும். படுக்கப் போகுமுன் சூடாக ஒரு கோப்பைப் பால் சாப்பிட்டால் இருமலின் கடுமை குறையும். இளஞ் சூடான நெய் ஒரு தேக்கரண்டி சாப்பிட்டாலும் இருமல் குறையும். 'அதிமதுரத்தை' வாயில் ஒதுக்கி எச்சிலை விழுங்கினாலும் தொண்டை ரணம் ஆறும்.

சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது

டான்ஸில் வீக்கத்தால் இருமல் ஏற்பட்டால் தொண்டைக்கு மருந்து பூசுவதோடு, தினசரி இரண்டு முறை உப்புப்போட்ட வெந்நீரால் வாய் கொப்புளிக்கவேண்டும். பால், மீன் எண்ணெய், **கால்ஸியம்** முதலிய வற்றை உட்கொள்ள வேண்டும். இதனால் **டான்ஸில்** வீக்கம் குறைந்து இருமல் நிற்காவிட்டால் **E. N. T.** வைத்தியரிடம் காட்டி அவைகளை **ஆப்பரேஷன்** செய்துவிடுவது நல்லது. உள் நாக்கு வளர்ச்சியால் ஏற்படும் இருமலைப் போக்குவதற்கு **E. N. T.** வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை பெறவேண்டியதுதான் நல்லது.

பொதுவாக மாணவிகளுக்கு சத்துப் பொருள்கள் நிறைந்த ஆகாரம், நல்ல சுத்தமான காற்று, ஓய்வு இவை போதிய அளவு கிடைக்கும்படி நாம் பார்த்துக் கொண்டால் அவர்கள் ஆரோக்கியமாக வளர்வார்கள். நோய் அவர்களை அணுகாது.

S. **திரிபுரசுந்தரி**, M.B.B.S.
(அன்னையர் தினத்தன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

लेडी शिवस्वामी ऐयर लड़कियों की उच्च पाठशाला पत्रिका

मैलापूर

॥ समाचार पत्र ॥

सभी पढे लिखे लोग समाचार पत्र पढते हैं। ये समाचार पत्र अंग्रेजी, हिन्दी या कई प्रांतीय भाषाओं में होते हैं। हमारे देश में शहर बहुत कम हैं। हर एक शहर में अंग्रेजी और प्रान्तीय भाषाओं में समाचार पत्र होते हैं। बंबई, कलकत्ता या मद्रास इन शहरों में कई तरह के समाचार पत्र होते हैं।

समाचार पत्र शाम और सुबह निकलते हैं। मद्रास में हिन्दू, एक्स्प्रेस सुबह के समाचार पत्र हैं। मेल शाम का पत्र है, मद्रास के बाहर रहनेवाले लोगों को सुबह या शाम के पत्रों में कोई फरक न होता, क्योंकि सब समाचार पत्र रात की रैल गाडी में जाते हैं। बंगलूर, कोयंपुत्तूर और हैदराबाद आदि कई ऐसे शहर हैं जहाँ सुबह का समाचार पत्र दिन में ही हवाई जहाज से पहूंच जाते हैं।

तार और टेलिफोन की सहायता से अमेरिका या यूरोप के समाचार तुरन्त ही दूसरे देशों में पहूँचते हैं और ससाचार पत्रों के द्वारा लोगों को मिलते हैं। गाँवों में बिजली नहीं होने के कारण रेडियों का उपयोग नहीं हो सकता। समाचार पत्रों से ही बहुत से लोगों को समाचार मिल सकते हैं। समाचार पत्रों में सरकार के मुख्य कई बिषय आते हैं और प्रधान मंत्री, और सज्जनों के भाषण मिलते हैं। सोना- चांदी और सब तरह की चीजों का दाम समाचार पत्रों में दिया जाता है। क्रिकट, फुड़बाल, टेन्निस इनके मेंटचों का विवरण भी दिया जाता है। कभी कभी, ऐसा मालूम होता है कि इस दुनियाँ में कोई सभाचार ऐसा नहीं है जो समाचार पत्र में नही आता।

R. V. Rajalakshmi, VI. A.

॥ व्यायाम ॥

मनुष्य को शिक्षा और ताकत की ज़रूरत है। मनुष्य की शारीरिक और मानसिक शक्तियों को विकसित करने का साधन शिक्षा और व्यायाम है। व्यायाम, मनुष्य को स्वास्थ्य और सौन्दर्य देता हैं। व्यायाम अनेक प्रकार के होते हैं। वे, कुश्ती, डंबल, आसन, दण्डबैठक, खेलना, दौडना, फुटबाल, वालिबाल, क्रिकेट, हाकी, टेनिस इत्यादि हैं। लकडी काटना,

पानी भरना, खेत या बाग में काम करना आदि गरीबों के व्यायाम हैं।

व्यायाम, एक बडा मैदान, उद्यान, वाटिका, घरों के छतों में या शहर के बाहर खुली जगहों में किया जाता है। व्यायाम करते समय, गहरी साँस लेते हैं। गहरी साँस लेने से खून साफ़ होता है। बदन में ताकत आती है। सीधे बैठना, ठीक चलना, शरीर को रगडकर स्नान करना और अधिक मेहनत से काम करना आदि भी व्यायाम के अंग हैं। चबा-कर खाने से दन्तों का व्यायाम होता है। व्यायाम करनेवालों को चर्बी बढानेवाले भोजन अवश्य है। ग्रीष्म में व्यायाम कम करना चाहिए। अब स्कूलों में, विद्यार्थियों को व्यायाम सिखाया जाता है। जिसके शरीर में ताकत है, उसके सब मित्र हैं। रोगियों का कोई मित्र न होगा। इसलिए सब लोगों को व्यायाम करके बलवान होना चाहिए।

M. N. Revathi, VI. C.

॥ बरसात ॥

बरसात का समय था। एक लडकी बरसात को देखकर ऐसे बोलने लगी।

बरसात, तुम हो हम सब के प्राणाधार। तुम्हारे बिना यह सारा संसार नहीं रह सकता। लोग जीवित रहने के लिए पानी बहुत ज़रूरी है। वह पानी मिलने को तुम कृपा करते हो। भूमि को हरी भरी बनाना भी तुम्हारे हाथों में है।

कभी कभी बिना पानी बरसाकर तुम लोगों को हैरान कर देते हो। लडके भी तुमको देखकर बहुत खुशी से खेलने का इन्तज़ाम करते हैं। तुम सब जगहों को सुन्दर रखते हो। किसान तुमको पूजा करते हैं। तुमको सब लोग आदर करते हैं।

तुम ही हो सब का मददगार, तुम ही हो अन्नपूर्णी, तुम ही हो सब को सुख देनेवाले, तुम ही हो शाँति देनेवाले, और तुम ही हो दुख को दूर करनेवाले।

हे बरसात तुम अज़ीब हो। तुम इस देश को सुख से रखो।

T. V. Parvatham, VI. D.

॥ ग्राम्य जीवन ॥

हमारे देश में कई गाँव हैं। गाँव के लोग अपने जीवन बिताने के लिए, दूसरे गाँव या शहर पर भरोसे नहीं करते। सब काम खुद वेही करते हैं। इसी तरह वे बहुत खुशी से रहते हैं। गाँव के लोग सबेरे उठकर, घर को साफ़ करते हैं। वहाँ बहुत खेत हैं। लोग, उसमें काम करने के लिये सबेरे उठकर जाते हैं। वहाँ शहर की तरह पानी का कष्ट नहीं है। वहाँ मोटर या बस नहीं है। इसलिए बच्चे बाहर जाकर खेल सकते हैं। खेत देखने में बहुत सुन्दर होते हैं। वहाँ लोग सुबह से शाम तक काम करते हैं। वे बहुत खुशी से रहते हैं। गाँव का जीवन सरल और सुन्दर है। ऐसा जीवन और कहीं नहीं मिलता ?

P. Vimala, V. A.

नेह निभावन एक रस, महा कठिन व्योहार।

॥ भारत की राष्ट्र भाषा ॥

प्राचीन काल से भारत भर की सभ्यता एक ही तरह है। आचार-व्यवहार, रहन-सहन, विवाह सब एक ही प्रकार के हैं। इसलिये भारत में एक ही भाषा होनी चाहिए। हिंदी सब से सरलभाषा उर्दू, बंगाली, मराठी आदि कोई भाषा राष्ट्र भाषा बन नहीं सकती।

अंग्रेजों के आने के कारण अंग्रेजी राष्ट्र-भाषा बन गयी। इसकी वजह से देश भर की एक सामान्य भाषा नहीं हो सकती थी, जब मुसलमान बादशाहों ने अपना साम्राज्य विस्तार किया तब पंजाब से लेकर बंगाल तक और काश्मीर से लेकर दक्षिण तक उनकी राजकीय भाषा उर्दू व्यवहृत होने लगी। यदि मुसलमान बादशाह ही बहुत दिनों से राज करते तो उर्दू राष्ट्र-भाषा बन जाती। मगर अंग्रेजों के आने के बाद मुसलमान राज्य का पतन होने लगा।

